# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. *1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது* Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"**

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு வைகாசி மாதம் 1-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 16-ம் இலக்கம்


# பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதி

# பல்லாண்டு வாழ்க!

## ஆண்டகை அவர்களுக்கு நல்வரவாகுக!

# சூசைமாமுனிவர் ஓர் குலமகன்

— V. M. Joseph —


"குலமகன்" என்னும் பதத்தின் கருத்து நல்லமாதிரியாக ஆடையணிந்து எல்லோராலும் நன்குமதிக்கப்பெற்றுச் சீரானவாழ்க்கைநடாத்தும் ஒருவரையே குறிப்பதாகுமெனக் கருதுக்வார் பலர்உண்டு. இத்தகைய இலட்சணங்கள் ஒருவரிடம் காணப்பட வேண்டியது அவசியமாயினும் உண்மையானகுலமகனின் அடையாளங்கள் வெளித்தோற்றத்தில்மட்டும் தங்கியிருப்பதில்லை. கருதினல் நியூமன் ஆண்டவர் ஓர் குலமகனைப் பற்றி வர்ணித்தபோது: "எவருக்கும் எவ்வகையிலும் தீங்கிழையாதவனும், மற்றவர்களின் வாழ்வு சோபிக்கத் தன்ஞலானவற்றைச் செய்வதற்குத் தன்னலங்கருதாது முன்னணியில் நிற்பவனும், பிறர்பொருட்டுத் தான் கஷ்டமனுபவிக்க நேரினும் பின்வாங்காதவனுமே குலமகன்" எனக் கூறியிருக்கின்ருர்.

### அவர் நீதிமானுய் இருந்தார்

மேற்கூறியவைகள்யாவும் எவ்வாறு அர்ச். சூசைமாதவனின் வாழ்க்கையிலே பிரதிபலிக்கின்றன என்பதை ஆராய்வோம். வேதாகமங்களிலே இவரைப்பற்றிச் சொல்லியிருப்பதெல்லாம் மூன்றே மூன்று வார்த்தைகள் மாத்திரமே. **"அவர் நீதிமானுய் இருந்தார்."** ஆனல், இம்மூன்று வார்த்தைகளிலும் அடங்கியிருக்கும் கருத்தோ விபரிக்குந்தரமல்ல. இவருடையநீதி எப்படிப்பட்டது? சம்மனசானவர் இவருக்குத்தரிசனையாகித் தேவகுமாரனின் கைத்தாதையாய் இருப்பீர்என்று அறிவித்தபோது, அவர் எவ்விதமானமறுப்பும் சொல்லவில்லை. கைத்தாதையாக ஏன் இருக்கவேண்டுமென்று விசாரிக்கவுமில்லை. எக்காரணத்திற்காகத் தேவதாயாருக்கு முன் இந்தஅறிவித்தல் தமக்குக்கொடுபடவில்லையென்று கேட்கவுமில்லை. திடவிசுவாசத்தோடு தமக்கறிவிக்கப்பட்டசெய்தியைஏற்று அக்ஷணத்திலிருந்தே தேவஅன்னைக்கு எவ்விதஇன்னலும்வாராது, இடுக்கண்ஏற்படாது முன்னிலும் பன்மடங்குகரிசனையாய் அவரைக் கண்காணித்துவந்தார்.

### தேவனின் குரற்தொனியைக் கேட்டார்

திவ்வியகர்த்தரின் பிறப்பின்போது அவரதுகைத்தாதை என்றமட்டிலே நசரேத்தூரில், தமது சொந்தஇல்லத்தில் திருக்குழந்தை பிறக்கவேண்டுமென்று விரும்பியிருப்பார். தமது சொந்தமனையில் தங்கியிருப்பதால் ஏற்படக்கூடிய சௌகரியங்கள், அயலவர்களால் தேவதாயாருக்குக் கிடைக்கக்



கூடிய உதவிஒத்தாசைகள்யாவும் கிடைக்கவேண்டுமென்று அவர்இயற்கையிலேமுற்றும் விரும்பியிருப்பார். ஆனல், நிகழ்ந்ததுஎன்ன? தேவதாயாரின் திரேகநிலை திருப்திகரமற்றிருந்த அதேநாட்களிலே சக்கரவர்த்தியின் பிரகடனத்திற்கமைந்து பெத்லகேம்நகருக்கு இருவரும்பயணமானுர்கள். காரணங்காட்டி அப்பயணத்தை நிறுத்திவிடுவதை அர்ச். சூசையப்பர் விரும்பவில்லை. அரசகட்டளையிலே **தேவனின் குரற்தொனியை** அவர்கேட்டார். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு, பெத்லகேமிலே எங்கு தங்குவோமென்றுதானும் சிந்தியாது தேவதாயாருடன் புறப்பட்டுப் போனர்.

### ஆச்சரியத்துக்குரிய சகிப்புத்தன்மை

பெத்லகேமிலே முனிவர்க்கும், மரியன்னையர்க்கும் நேர்ந்தகஷ்டங்கள் யாவும் நாம்அறிந்ததே. இனசனர் சிநேகிதாற்று, இல்லிடமற்று, சத்திரம் சாவடியிற்தன்னும் தங்களைஏற்பாராற்று, ஈற்றில் மாடாடுகள் மாரிக்குறையும் ஓர்குகையில் தங்கினரன்றே! இப்படியான ஓர்சந்தர்ப்பத்தில் வேறுபேரென்றல் என்ன செய்திருப்பார்களென்று சொல்லவும்வேண்டுமா? அவதரிக்கப்போகிறவர் தேவகுமாரனுயிருந்தும், பரமபிதா எவ்வித அக்கறையும் எடுக்காததுகண்டு ஆத்திரங்கொள்ளாதிருப்பரா? விசுவாசத்திலே தத்தளியாதிருப்பரா? அர்ச். சூசையப்பரோ இவைகளையெல்லாம் சொல்லொணுப் பொறுமையுடன்தாங்கினர். நேர்மையான ஓர்மனிதருக்கு இவ்விதகஷ்டங்கள்நேரும்போதுஅவைகளை எவ்வாறு அவர்சகிப்பாரென்று நம்மால் விபரிக்கமுடியாது. அர்ச். சூசையப்பரின் ஆச்சரியத்திற்குரிய சகிப்புத்தன்மையை எமக்குண்டாகும் இக்கட்டு இடைஞ்சல் வேளைகளிலே — அவைகள் இலகுவாயிருந்தாலுஞ்சரி, கடினமாயிருந்தாலுஞ்சரி—கண்டுபாவிக்கத் தெண்டிப்போமாக.

### புதுமைசெய்ய முடியாதா?

இம்மட்டிலே அவருக்குற்ற துன்பதுயரங்கள் நீங்கினவா? இல்லை. ஏரோதரசன் தேவபாலகனைக் கொல்வதற்காக எண்ணிறந்த மாசற்றகுழந்தைகளைச் சங்காரஞ்செய்தான். சம்மனசானவரின் எச்சரிக்கையின்பேரில் அவர் உடனேதானே தேவகுழந்தையையும், திருத்தாயாரையும் அழைத்துக்கொண்டு அர்த்தசாமத்திலே முன்பின் அறியவாராத தேசமாகிய எஜிப்திற்குப் பிரயாணப்படுகின்ருர். தேவன் தமது ஏகபேறுன திருக்குமாரனைக் காப்பாற்ற ஓர்புதுமை செய்யமுடியாதா? என்று அர்ச். சூசையப்பர் எண்ணினரா? பரமபிதாவின் ஏற்பாடுகளைத் தம்மால்இயன்றவரை எவ்விதகஷ்டந்தான் நேர்ந்தபோதிலும் சமுத்திரையாய்ச் செய்துமுடிப்பதிலே கண்ணுங்கருத்துமாய் இருந்தாரல்லாது தேவனின் ஏற்பாடுகளைப்பற்றி ஆட்சேபிக்க முன்வரவில்லை. எவ்வளவுகாலம் [illegible]ங்கவேண்டி வருமென்று [illegible]அறிந்துகொள்ள ஆசிக்கவில்லை. இன்னும் சிமோனின் தீர்க்கதரிசனத்தின்போதும், தேவபாலகன் மூன்றுநாள் காணமற்போனபோதும் சூசைமுனீந்திரன் அனுபவித்ததுன்பம் கொஞ்சநஞ்சமா? திவ்வியயேசுவை ஆலயத்தில்கண்டதும் ஏதாவது முறையிட்டாரா? இல்லை.

ஈற்றில் நசரேத்தூரில் வாசஞ்செய்யச்சென்ற திருக்குடும்பத்தின் வரலாறு என்ன? அவரின் உறுதுணையாக யார்இருக்கின்றனர்? எல்லாம் வல்ல இறைவனின் நேசகுமாரனும், மாசில்லாமல் உற்பவித்த தேவதாயாரும்அல்லவா! இந்தத் திருக்குடும்பத்திலே விளங்கின ஒழுக்கம், மரியாதை, பரஸ்பரஅன்பு முதலியவைகளை விபரிக்க எவராலுமேமுடியாது. ஒருவர் ஒருவருக்கு எவ்வாறு அனுசரணையாய் இருந்தார்கள், ஒருவருடன் மற்றவர் வார்த்தையாடும்போது எத்துணை மேரைமரியாதை காண்பித்தார்கள், அவர்களுடைய வாழ்க்கையின்ஒழுங்கு ஆதியவற்றைக் கூர்ந்து அவதானிக்குங்கால் அவர்கள்வசித்த குடிசையில் மோட்சானந்தம் பிரதிபலித்தது என்றே சொல்லவேண்டும்.

### வறியதச்சன் ஆனல், குலமகன்


அம்மட்டா! திவ்விய இரட்சகர் உதவிபுரியச் சூசைமாதவர் நெற்றிவியர்வை நிலத்தில்விழ உழைத்ததின் பயனுகத் தொழிலுக்கு எப்படிப்பட்ட மதிப்பை உண்டுபண்ணினர்! கடினமாயினும் நேர்மையானவேலை, ஆசாரஉபசாரம், ஒழுக்கம்யாவும் ஒருங்குசேர்ந்து அந்த எளியதொழிற்சாலையில் செய்யப்பட்ட மிகச்சிறிய வேலைகட்கு பன்மடங்கும் பெருமையைக் கொடுத்தன. ஆகவே, சூசைமாமுனிவர் ஒருவறியவராய் இருந்தபோதிலும் அவரை ஒருகுலமகனுக நாம் கொண்டாடுவதில் எவ்விததயக்கமும் கொள்ளலாகாது. அவரிலே இயற்கையாக அமைந்திருந்த குணங்களைத் தேவனே தமது வரப்பிரசாதங்களினல் பிரகாசிப்பித்தார். இதன்நிமித்தம் எமது அன்புக்குப் பாத்திரமான மனிதத்தன்மை உடையவராயினும் மகாமேன்மை பொருந்திய — உண்மையில் குலமகனுன ஓர் அர்ச்சியசிட்டர் எமக்குமுன் தோன்றியுள்ளார். அவரைக் கண்டுபாவித்துச் சங்கிப்போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. G. யோசவ் பொன்ராசா
அவர்களின்

## அமரதின நினைவு

முதல் ஆண்டு



தோற்றம்: 4—5—1921 மறைவு: 4—5—1957

"வற்றாத அருளின் ஊற்றாயிருக்கிற வல்லமை பொருந்திய யேசுவே! தேவரீருடைய சரீரசத்துவமும், இருதய பலமும் அற்றுப்போய்த் திருத்தலை சாய்ந்து எல்லாம் நிறைவேறிற்றென்று திருவுளம் பற்றின பொழுது நீர் அனுபவித்த கஸ்தியைப் பார்த்து யோசவ் பொன்ராசாவின் ஆத்துமத்தின்பேரில் இரக்கமாயிரும்."

யாழ்ப்பாண அரசினர் சிறைச்சாலையிற் கடமையாற்றி, என்னை அத்தியந்த அன்போடு நேசித்து, எம் குடும்ப பாரத்தை மனோதாரத்துடன் தாங்கிநின்ற வச்சிரத்தம்பமாகிய எனது பிரிய பிராணபதியும், எங்களின் பேரன்புத் தந்தையருமாகிய திரு. G. யோசவ் பொன்ராசா அவர்கள் காத்திராப் பிரகாரம் காலன் கைப்பட்டு, எம்மைப் பரிதவிக்க விட்டு அமரத்துவமடைந்த முதல் ஆண்டு 1958-ம் வருடம் வைகாசித் திங்கள் 4-ம் நாள் பூர்த்தியாகிறது. அன்றுகாலை 6 மணிக்கு அன்னவரின் ஆன்மசாந்திக்காக ஆசனக் கோவிலிலே ஓர் துக்கப்பூசை நடந்தேறும்.

இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். கன்னியாஸ்திரிமார், சகோதர சகோதரிகள், பந்துமித்திரர்சகலரும் கத்தோலிக்க கிறிஸ்துவ கருணையோடு இவ்வாத்தும சாந்திக்காக வேண்டிக்கொள்ளத் தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மனைவி: **திருமதி யெஸ்சி மேரி யோசவ்வின் யோசவ்**

மக்கள்:

**ஆன் கத்தறின் ஐடா யோசவ், அன்ரன் புஷ்பராசா யோசவ், மேரி கில்டா யோசவ் பிரான்சீஸ் வலன்ரைன் றபின்றராசா யோசவ் பிரான்சிஸ்கா யெனற் லிண்டா யோசவ்.**

4, மருதடி லேன், றக்கா றேட்,
நல்லூர் தெற்கு.

# நாளு சங்கதிகள்

● பரிசுத்த ஸ்தானத்தினிடமாக இருந்துவந்த ஜப்பானிய தூதுவராலயம் ஸ்தானிகராலய வரிசைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனால் தற்போது வத்திக்கானிடமாகப் பிற நாடுகளைச்சேர்ந்த 33 ஸ்தானிகர்களும், 15 தூதுவர்களும் இருக்கின்றார்கள்.

● பிரித்தானியிலே மரியாயின்சேனையைச்சேர்ந்த ஆயிரவருக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் ஐம்பதுநோயாளருடன் லிவர்ப்பூல்நகர் அதிமேற்றிராணியாரான ஹீனன் ஆண்டவரது தலைமையிலே சென்ற பாஸ்குவாரத்தில் லூர்துபதிக்கு ஓர்யாத்திரைசெய்து திரும்பியிருக்கிறார்கள்.

● 9-ம் பத்திநாத பாப்பானவர் பரமபதமடைந்த 80-ம் ஆண்டு நிறைவு ஞாபகதினம் அன்றுவெள்ளிக்கிழமை வந்தபோது, அவருடைய கல்லறை முன்பாகப் பெருந்திரளானமக்கள் கூடியிருந்து திவ்வியபூசைகண்டு அவர் விரைவிலே முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுமாறு மன்றாடிக் கொண்டார்கள்.

● ஐக்கியஅமெரிக்கதேசம் வானவீதியிலே சென்றபங்குனிமாதம் மிதத்திவிட்ட சிறிய 'வான்காட்'என்ற செயற்கைச்சந்திரன் குறைந்த பட்சம் இருநூற்றாண்டுகளாகப் பூமியைவலம் வந்துகொண்டிருக்குமென்று வான் காட்திட்டத்தின் தலைவரான டக்றர் ஜோண் ஹேகன் கூறுகின்றார். இந்த உபக்கிரகம் 2 மணித்தியாலம் 14நிமிஷம் 4செக்கனுக்கு ஒருமுறை பூமியைச்சுற்றிவருகின்றது.

● பரிசுத்தபாப்பரசர் தமதுபாஸ்குத்திருநாட் சொற்பொழிவை நிகழ்த்தி முடிந்தும் அங்குசமூகமாயிருந்த பிரமாண்டமான சனக் கூட்டத்தை நோக்கிப் பிரான்சிய, ஆங்கில, ஸ்பானிய, போத்துக்கீசிய, ஜேர்மன்பாஷைகளிலும்-முதன்முறையாக டச்சுப்பாஷையிலும் பேசலாயினர். "சுயதேசத்திலேஉங்களுக்கு அருமையானவர்கள் எல்லோருக்கும்" என்றுகூறி ஆங்கிலபாஷைபேசும் யாத்திரிகர்களுக்குத் தமதுவிசேஷஆசீர்வாதம் அருளினர்.

● பூமியின்மேற்பரப்பில் நூற்றுக்கு ஏறக்குறைய 25விகிதமானபாகமும் வனாந்தரமும்,பாதிப்பக்கமானவனாந்தரமுமாய் இருந்துவருகின்றது. ஆனால், இந்தவனாந்தரபிரதேசத்தில் 10விகிதமானபகுதியே உள்ளபடி பயன்படுத்தப்படுகின்றது.

● ஆபிரிக்காவின் முழுக்குடிசனமாகிய 22 கோடியே 40 லட்சம்மக்களில் 2கோடியே 40லட்சம் பேர் கத்தோலிக்கரென்று றோமாபுரியிலிருந்து புள்ளிவிபரம் கிடைத்திருக்கிறது. இவர்களில் ஞானஸ்நான ஆயத்தகாரரான சுமார் 30 லட்சம் ஆபிரிக்கமக்கள் அடங்கமாட்டார்கள்.

● பாஸ்குத்திருநாள் வருவதைத் தெரிவித்துச் சென்ற பெரியசனிக்கிழமை நடுச்சாமத்தின்போது றோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய கோபுரத்திலிருந்து ஒரேயொருமணி அடிக்கலாயிற்று. இந்தமணிச்சப்தத்துக்குப் பதிலளிக்குமுகமாக றோமாபுரியிலுள்ள 447 கோவில்களின்மணிகளும்அடித்து நாதகீதஞ்செய்யலாயின.

● டக்றர் றிக்கார்தோ கலீஸி லிஸி அவர்கள் கடந்த 27 ஆண்டுகளுக்கு மேற்படப் பரிசுத்தபாப்பரசரின் சொந்தவைத்தியராய் இருந்துவருகின்றார். 1954-ம்ஆண்டு பரிசுத்தபிதா சீவாபத்துக்குரிய நோய்கண்டிருந்தபோது அவருக்கு வைத்தியசிகிச்சை செய்த நிபுணர்களில் இவரும்ஒருவராயிருந்தார். இவர் றோமைநகரிலே பிரத்தியேக ஆஸ்பத்திரிஒன்றைப் பிரஸ்தாபமாக நடத்திவருகின்றார்.

● கத்தோலிக்க இந்திய மேற்றிராணிமார் சங்கத்தின் ஆதரவைப்பெற்ற இந்திய லூர்துபதி யாத்திரை ஒன்று வருகிற வைகாசி மாதம் 16-ந் திகதியன்று பம்பாயிலிருந்து புறப்படவிருக்கிறது. இந்த யாத்திரைக்கோஷ்டி தனது சுற்றுப்பிரயாணத்தின் போது லூர்து, பரீஸ், லிசியோ, நெவெர்ஸ், லண்டன்முதலாம் இடங்களைத்தரிசித்துக்கொண்டு 30நாட்களில் தனதுயாத்திரையை மு[illegible].

# வைகாசித்திருநாள் — பாத்திமாகிரி

## பண்டத்தெருப்பு

பண்டத்தெருப்பு, பாத்திமாகிரியில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் மாசற்றஇருதயநாயகியின் திருஸ்தலத்திலே பாத்திமாவில் தேவஅன்னை முதல்தரிசனைஅளித்ததினம் அடுத்தவைகாசிமாதம் 12-ந்திகதி திங்கட்கிழமை மாலை 7 மணி தொடக்கம் கொண்டாடப்படும்.

**நிகழ்ச்சிநிரல்**

மாலை: 7-00 திவ்விய சற்பிரசாதம் எழுந்தேற்றம் செய்யப்படுதல்.
7-15 முதலாவது செபமாலை (காரணிக்க விளக்கத்துடன்)
8-15 இரண்டாவது செபமாலை (காரணிக்க விளக்கத்துடன்)
9-15 மூன்றாவது செபமாலை (காரணிக்க விளக்கத்துடன்)
10-15—11-00 இடைவேளை.
11-00—12-00 திருமணித்தியாலமும், சற்பிரசாத ஆசீர்வாதமும்
12-00 திவ்வியபூசை.

6-ந்திகதி தொடக்கம் தினமும பிற்பகல் 6-30 மணிக்கு மாலைஆராதனையும், பிரசங்கமும் நடைபெறும்.

பாத்திமாகிரி
24-4-58

**P. T. ஜேம்ஸ், O. M. I.**
கட்டளைக்குரவர்

## காக்கைகள் மாநாடு

**"பீப்பீ"**

ஆற்றங் கரையிலோர் ஆலமரம் — அங்கு
ஐம்பதினாயிரம் காக்கைகளாம் — குல
ஏற்றத்திற் காகிய மார்க்கங்கள் சாற்றிட
எண்ணற்ற பண்டிதக் காக்கைகளாம்!

●

நேர்த்தியாய் வீசிடுந் தென்றலிலே — சுப
நேரத்திலே மாலை வேளையிலே — கருங்
கார்வண்ணக் காக்கை தலைமையிலே அந்தக்
காக்கைகள் மாநாடு கூடினவாம்!

●

சீருடனே திருக்கார் வண்ணனார் — ஒரு
சீரிய சொல்லுரை சாற்றினராம் — புகழ்
சாரும் பிரசங்கியான கொடுங்கண்ணன்
தானொரு சொற்பொழி வாற்றினாராம்!

●

செத்த எலிகளைத் தூக்கவேண்டாம் — வீதி
சிந்திய எச்சிலைத் தீண்டவேண்டாம் — தெருச்
சுத்தமாக்குந் தொழில் செய்யா தொழித்து நந்
தோட்டிப் பட்டத்தினை ஓட்டவேண்டும்!

●

காக்கையிலே சின்னக்காக்கை என்றும் — அண்டங்
காக்கையென் றும்பிரி வேற்படுத்தி — சாதி
ஆக்கிப் பிளவுகள் ஊக்கி அழிகின்ற
அம்புவி மாந்தர்போ லாகவேண்டாம்!

●

கள்ளங் கபடின்றி வாழ்ந்திடுவோம் — இந்தக்
காசினி எங்கும் பறந்திடுவோம் — உயிர்
உள்ளமட்டும் புகழ்தேடிடுவோம் குல
ஒற்றுமை நாட்ட உழைத்திடுவோம்!

●

மானிடர் போற்றும் அறிவு பெற்றாலும் — நம்
மத்தியிலோர் குறைபாடு உண்டு—பெருங்
கானிலுறைகின்ற கள்ளக் குயில் முட்டை
காத்து வளர்த்து ஏமாறுகின்றோம்!

●

ஊன்உண்ணும் வாடிக்கை நீக்கவேண்டும் — சைவ
உண்டிகள் உண்டுயர்ந் தோங்கவேண்டும் — என்று
தேன்சிந்துஞ் சோலையில் வாழ்கின்ற மை வண்ணன்
தீவிர மாயெடுத் தோதினாராம்!

●

கள்ளப் பருந்தினைத் தோற்கடிக்கும்—வீரக்
காக்கை கரிச்சானுக் கஞ்சுவதேன்? — என்று
வெள்ளிமலைக் காக்கை கூறியதும் காக்கை
வீரர்கள் மார்தட்டிக் கொண்டார்களாம்!

●

இன்னும் பலர் உரை சாற்றிடவே —சபை
ஏற்றுத் தீர்மானங்கள் செய்திடவே — கருங்
கன்னிப் பெண்கள் பத்து மங்களம்பாடவே
காக்கைகள் எல்லாங் கலைந்தனவாம்!

---

● நியூயோக்மாகாணம் கமத்தொழிலுக்குட்பட்டதாய் 1கோடியே 50 லட்சம் ஏக்கர்நிலத்தைக் கொண்டிருக்கிறது. அதேதொகையான மக்கள் அம்மாகாணத்தில் வசிக்கின்றார்கள். ஆனால், 9கோடி மக்களைக்கொண்ட ஜப்பானில் 1கோடியே 30லட்சம்ஏக்கர் நிலத்தில்தான் கமத்தொழில் நடைபெறுகின்றது.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Intestate estate of Kanagasabai Kandiah of Vilanai, Karainagar, Ceylon late of Kuala Lumpur in the Federation of Malaya.

Deceased.

Testamentary Jurisdiction } No. 445

1. Ramalingam Nadarajah and
2. wife Chellammah both of Vilanai in Karainagar.

Petitioners

Vs.

1. Arumugam Nagalingam.
2. Ponnupillai widow of Ramanathar both of Vilanai, Karainagar.
3. Sinniah Ponniah and
4. wife Sooraratnam both of do presently No. 21, Fort. Jailor's Bungalow, Jaffna.
5. Veeragathy Thillainayagam presently at Sivapragasam Road, Vannarponnai, Jaffna.
6. Veeragathy Kandasamy presently at Ceylon & Foreign Trades Limited, P.O. Box 912, Colombo.
7. Rasammah widow of Kanagasabai Kandiah of Valupodai, Karainagar.

Respondents.

This matter coming on for disposal before S. Sri Skanda Rajah Esquire, District Judge, Jaffna on the 7th day of March 1958 in the presence of Mr. M. M. Sultan, Proctor on the part of the petitioners and their affidavit and petition having been read:

It is ordered that Letters of Administration to the estate of the abovenamed deceased be granted to the 2nd named Petitioner as one of the heirs of the abovenamed deceased unless the Respondents or any other person or persons interested in this matter shall appear before this Court on or before the 28th day of April 1958 and show cause to the satisfaction of this Court to the contrary.

This 7th day of March 1958.

Sgd. S. SRI SKANDA RAJAH,
District Judge.

Drawn by:
Sgd. M. M. Sultan,
Proctor for Petitioners.

## முதல் வெள்ளி
## முதற் சனி

—*—

**நாளை(2-5-58)வெள்ளிக்கிழமை முதல்வெள்ளி-மறுநாள் முதற்சனி**

தொடர்பாக ஒன்பதுமாதங்களிலே முதல்வெள்ளிக்கிழமை தோறும் திவ்வியநன்மை வாங்குகிறவர்களுக்குப் பாக்கியமான மரணமடையும் வரப்பிரசாதத்தை அருள்வதாக நமது திவ்வியகர்த்தர் வாக்களித்திருக்கிறார்.

தொடர்பாக ஐந்துமாதங்களிலே முதற்சனிக்கிழமை தோறும் திவ்வியநன்மைவாங்கித்தேவஇரகசியங்களைத்தியானித்துக்கொண்டு 15 நிமிஷநேரம் செபமாலை செபிக்கிறவர்களுக்கும் அதேவாக்குத்தத்தத்தைப் பரிசுத்த தேவதாயார் அளித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைவாசஞ்செய்யுங் குருமார்

கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள செக்கோசிலவக்கிய நாட்டில் மூன்றுமேற்றிராணிமாரும், 450-க்கும், 500-க்குமிடைப்பட்ட குருமாரும் சிறைச்சாலைகளிலும், கூட்டடைமுகாங்களிலும் சிறைவைக்கப்பட்டிருக்கின்றூர்கள். ஸ்பிஸ்மேற்றிராசன துணைமேற்றிராணியாரான பார்னேஸ்ஆண்டவரும், 1950-ம்ஆண்டு 25வருடசிறைத்தண்டனை விதிக்கப்பெற்ற ஒலோமோக்மேற்றிராசன துணைமேற்றிராணியாரான சிலாஆண்டவரும், பிறெசவ் மேற்றிராசன விக்கார்ஜெனறலான ஹொப்கோமேற்றிராணியாருமே சிறையிருந்துவரும் மூன்றுமேற்றிராணிமார்களுமாவர். பார்னுஸ்மேற்றிராணியாரும், 100குருமாரும் லெயோப்போல்டல்எனுமிடத்திலுள்ள பயங்கரசிறைச்சாலையில் இருந்துவருகிறூர்கள். இங்கே சமய ஆராதனைவழிபாடுகள் நடப்பதில்லை. சமயசம்பந்தமான புத்தகங்ளோ, அன்றேல் வேதச்சாமான்களோஇல்லை. சாகுந்தருவாயில் இருப்பவர்களுக்கு அந்திய தேவதிரவியானுமானங்கள் அருளவோ, அல்லது பிரேதசேமச்சடங்குகள் நடத்தவோ குருமார் அனுமதிக்கப்படுவதில்லை. ஆயினும்சிறைச்சாலைச் சிற்றறைகளில் அந்தரங்கமாகத் திவ்விய பூசைநிறைவேறுகின்றது. மனுத்தன்மையற்றவிதமாக நடத்தப்பட்டபோதிலும் கைதிகளில்ஒருவர்தானும் தனதுவேதவிசுவாசத்தைக் கைவிடவில்லை. மறுபக்கத்திலே முன்னர்வெதுவெதுப்பாயிருந்தவர்கள் தற்போது நல்ல வேதவிசுவாசமுள்ளவர்களாய் மாறியிருக்கிறூர்கள். சுமார் 50 குருமார் விற்மன்னவ் எனுமிடத்திலுள்ள யூறேனியம் சுரங்கங்களில்வேலைசெய்துவருகின்றூர்கள்.

—(⌣)—

## முத். மாட்டீன் தே பொறஸ்

முத். மாட்டீன் தே பொறெஸின் வாழ்க்கைவரலாற்றை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட சினிமாப்படம்ஒன்று இவ்வருடம் ஐக்கிய அமெரிக்க தேசத்திலே காட்சிக்குத் தயாராயிருக்கும். இந்தப்படத்தில் அநேகபகுதிகள் அவரதுவாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட அதே உண்மையானஇடங்களில் வைத்துப் பிடிக்கப்பட்டனவாகும். பெருநாட்டிலே லீமாநகரில்வண. நோபேட் ஜோர்ஜெஸ்சுவாமியாரால் இந்தச்சினிமாப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவர் ஐக்கிய அமெரிக்கதேசத்திலுள்ள முத். மாட்டீன் தே பொறெஸ்சபையின் தலைவராவர். முத். மாட்டீனின் வீரத்துவபுண்ணியங்கள்பற்றிய ஒருபெருந்தொகையான அத்தாட்சிப்பத்திரங்களைச் சுவாமியார் சேகரித்திருக்கின்றூர். சமீபகாலத்திலே ஸ்பெயினில் அச்சேற்றப்படவிருக்கும் இப்பத்திரங்கள் அவருக்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டுவதைத் தீவிரிக்கச்செய்வதற்கும் உதவியாயிருக்குமென அவர்நம்புகிறூர்.

---

ஞானஸ்நானத்துக்குக் காத்திருக்கும்

## அறுபதினாயிரம் மக்கள்

சுதந்திர தென்வியெற்னும்நாட்டிலே சுமார் 60,000மக்கள் கத்தோலிக்கராக விரும்புகின்றூர்கள். ஆனல், அந்நாட்டிலே குருமாரும், பயிற்சிபெற்றஉபதேசிமாரும் அதிகம்குறைவாயிருப்பதால் அவர்கள் தற்போது வேதசத்தியங்களைப்படித்து, ஞானஸ்நானம்பெற்றுக்கொள்ள இயலாதிருக்கின்றூர்கள். அங்கே குய்-நொன்விக்காரியம் பொருளாதார விஷயமாய் மிகவும்கேவலமாக இருந்தபோதிலும் கம்யூனிஸ்தர்கள் அங்கிருந்தும் வெளியேறிய பின் கடந்துபோன மூன்றுவருடங்களிலும் அதன்கத்தோலிக்க சனத்தொகை 52,000பேரால் அதிகரித்து, 1,17,581பேராகியிருக்கிறது. ஞானஸ்நானம்பெற ஆசிக்கின்ற 60,000மக்களையும் ஆயத்தப்படுத்துதற்காக மிஷனரிமாருக்குஉதவியாய் 160வாலிபர்கள் தற்போது பயிற்றப்படுகிறூர்கள். மேலும் குய்-நொன்விக்காரியத்தில் ஏற்கனவேமனந்திரும்பியவர்களுக்கென்று 100 சின்னக்கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வருடமுடிவிற்குள் அங்கு மற்றும்170கோவில்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

---

## நூற்றண்டு கண்ட கத்தோலிக்க ஆஸ்பத்திரி

ஆஸ்திரேலிய கத்தோலிக்கர் இற்றைக்கு 100வருடங்களின் முன் தங்கள் முதலாவதுஆஸ்பத்திரியை— அதாவதுசிட்னிநகரிலே சென்வின்சென்ற்ஆஸ்பதிரியைத் திறந்தார்கள். இது பிறர்சிநேககன்னியாஸ்திரிமாரால்அடியிடப்படலாயிற்று. இன்றுஆஸ்திரேலியாவில் 72கத்தோலிக்க ஆஸ்பத்திரிகள் இருந்துவருகின்றன. இவற்றில் 14 சிட்னிநகரில் உள்ளன. சென்வின்சென்ற்ஆஸ்பத்திரி திறக்கப்பட்டபோது பிரத்தியேகவீடுஒன்றில் ஒருசில அறைகளையே கொண்டிருந்தது. தற்போதோ அது ஆஸ்திரேலியாவிலுள்ள மிகப்பாரியனவும், மகாமுக்கியம்பெற்றனவுமான ஆஸ்பத்திரிகளில் ஒன்ருய்த் திகழ்கின்றது. இதன் நூற்றுண்டுவிழா சமீபத்தில் கொண்டாடப்பட்டபோது கருதினல்கில்றேய்ஆண்டவரும், ஆஸ்திரேலியாவிலே பாப்பரசரின் அப்போஸ்தலிக்கஸ்தானுபதியாய் இருந்துவருகின்ற கார்பொனி அதிமேற்றிராணியாரும், அந்நாட்டின் கவர்னர்—ஜெனறல் சேர் வில்லியம் சிலிம் அவர்களும், மற்றும்அநேக பிரபலஸ்தர்களும் சமுகமளித்திருந்தார்கள்.

## ஐரோப்பாவின்மாதா சுரூபம்

இத்தாலிய அல்ப்ஸ்மலையிலே பனிப்படலத்தால் மூடுண்டிருக்கும் செறெனிஸிமா சிகரத்தின் மீது 45 அடி உயரத்திலே "ஐரோப்பாவின்மாதா" சுரூபம் ஒன்று நிறுவிநிற்கின்றது. ஓர் இத்தாலியசிற்பியான எகிதியோ கசாகிருந்தே என்பவரின் கைவேலைப்பாடான இந்தச்சுரூபத்தின் ஆதாரபீடமானது மனித உயரமுள்ள நான்குசம்மனசுகளைக்கொண்டிருக்கின்றது. செம்பினல்செய்யப்பட்ட இந்தச்சுரூபம் இவ்வருடத்தின் பிற்பகுதியிலே பிரதிஷ்டைசெய்யப்படவிருக்கிறது. அப்போது 34 ஐரோப்பியநாடுகளின் கொடிகள் அதன்ஆதாரபீடத்தைச் சூழவர ஸ்தாபிக்கப்படும்.

---

## கருதினல் ஸ்ரிபினக் ஆண்டவர்

கம்யூனிஸ்தநாடுகளில் ஒன்ருன யூகோசிலேவியாவிலிருந்து தங்கள்காலாந்தர தரிசனைநிமித்தமாக இந்தக்கோடைகாலத்திலே றோமாபுரிசெல்லவிருக்கின்ற மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமார்களின் முதலாவதுகோஷ்டியிலே கருதினல் ஸ்ரிபினக்ஆண்டவரும் ஒருவராகக்கூடுமெனப் பெல்கிறேட்நகரிலிருந்து கிடைத்துள்ளசெய்திகள் தெரிவிக்கின்றன. சாகிறெப்நகரின் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்ரிபினக்ஆண்டவர் கம்யூனிஸ்தர்களால் "யுத்தகுற்றங்க"ளுக்காகப் பதினறுவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அதில் ஒருபகுதியை நிறைவேற்றியதும் 1951-ம் ஆண்டு சிறைச்சாலையிலிருந்து விடுதலைசெய்யப்பெற்றூர். நிபந்தனையுடன் விடுதலையடைந்த இவர் அதுமுதல் தாம்பிறந்த இடமாகிய கிருசிக்பட்டினத்திலே சஞ்சரித்துவருகின்றூர். இரும்புத்திரைக்குப்பின்னுள்ள நாடுகளிலிருந்து முதன்முதலாகத் தமது காலாந்தர றோமாபுரித் தரிசனைக்குச்சென்றவர் போலாந்துதேச கருதினல்விசின்ஸ்கி ஆண்டவரே.

## மிகப் பெரிய ஆகாயத் திருயாத்திரை

ஐரிஷ் ஆகாயப்பிரயாண சரித்திரத்தில் மிகப்பெரியஆகாயப்பிரயாணம்ஒன்று சமீபத்தில் நடைபெற்றபோது சுமார் ஆயிரம் சாரணமாணவர்கள் டபிளின்நகரிலிருந்து லூர்துபதிசென்றூர்கள். இவர்களை ஐரிஷ்பிரயாணவிமானங்கள் 19முறைபறந்து லூர்துபதிகொண்டுபோய்ச் சேர்க்கலாயின. உலகின் எந்தப்பகுதியிலிருந்தாவது இதுவரைநடைபெற்றுள்ள மிகப்பெரிய தனி ஆகாயத்திருயாத்திரை இதுவாகும். துவாம்நகரின் வால்ஷ்அதிமேற்றிராணியாரே அதனைத் தலைமைவகித்துநடத்தினர். யாத்திரிகர்களுள் 60குருமாரும், 35 பிணியாளர்களும் இருந்தார்கள். இவர்களில் அதிகமானேரின் பிரயாணசெலவைச் சாரணர்களேபொறுத்தார்கள்.

---

## புதிய யேசுசபைச் சர்வகலாசாலை

பிலிப்பைன்ஸ்நாட்டிலே ககாயன்நகரிலுள்ளதும் "அற்றெனியே தே ககாயன்" என அறியப்படுவதுமான யேசுசபைக்கலாசாலை அந்நாட்டின் கல்விமந்திரியான திரு. மனுவேல் லிம்அவர்களால் ஓர் சர்வகலாசாலை வரிசைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. பிலிப்பைன்தீவுக்கூட்டத்தில் அதிகந்தெற்கேயுள்ள மின்டனுவோதீவின் முதற்சர்வகலாசாலை இதுவாகும். வருங்காலத்தில் சேவியர்சர்வகலாசாலையென இதுஅழைக்கப்படும். பிலிப்பைன்ஸ்நாட்டிலுள்ள மற்றும் இருபதுசர்வகலாசாலைகளில் மூன்றே கத்தோலிக்க சர்வகலாசாலைகளாகும். மனிலாநகரிலுள்ள சான்தோமாஸ்சர்வகலாசாலையும், இலொய்லேநகரிலுள்ள சான்அகஸ்ரீன் சர்வகலாசாலையும், செபுநகரிலுள்ள சான் கார்லோஸ் சர்வகலாசாலையுமே அம்மூன்றுமாகும்.

—(⌣)—

# மனந்திரும்பிய சீனக்கல்விமான்

கத்தோலிக்க திருச்சபையின் மட்டிலே இளமைமுதல் ஆழ்ந்த மனவெறுப்பும், துர்அபிப்பிராயமும் கொண்டிருந்தவரான சீனப்பண்டிதர்ஒருவர் இற்றைக்கு மூன்றுவருடங்களின்முன் 12-ம் பத்திநாதபாப்பரசரைப்பேட்டி கண்டபின் கத்தோலிக்கசமயத்தில் ஆர்வங்கொண்டவராகிச் சமீபத்தில் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கத்தோலிக்கராகியிருக்கின்றூர். சீனத்தேசியஅரசாங்கத்தின் உறைவிடமாகிய போர்மோசாதீவிலே தேசியபூர்வசரித்திர நூதனபொருட்காட்சிச்சாலைத்தலைவரும், சீன இளைஞர் படைவகுப்புகளின் கல்வி—சமாசாரப்பகுதி அதிபருமான டக்றர் பாவோ ரிசென்-பாங்எனப்பெயரிய 45வயதுடைய இவர் சீனத்தொழிற்றூதுக்கோஷ்டியில் ஓர் அங்கத்தவராக ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தபோது பாப்பரசரின் பேட்டிபெறலாயினர். அப்போதுஇவர் யேசுசபைஸ்தாபகரான அர்ச். இஞ்ஞாசியார் பிறந்தவீடாகிய ஸ்பானியதேச லொயலாபதியையும் தரிசிக்கலாயினர். இவ்வர்ச்சியசிட்டவரில் இவர்கொண்டஅபிமானங்காரணமாகப் போர்மோசாவிலுள்ள யேசுசபையாரின்சிரேஷ்டரும், தேசியபோர்மோசாச் சர்வகலாசாலையில் ஓர்பேராசிரியருமான வண. எட்வாட் மேர்பிசுவாமியாருடன் நட்புக்கொள்ளலாயினர். சுவாமியாரே இவருக்கு வேதசத்தியங்களைப் போதிக்கலாயினர். இருவருடங்களாகப் பெற்றுக்கொண்ட வேதஅறிவின்பயனுகக் கத்தோலிக்கசமயத்திலே நெடுங்காலமாக இவர்மனதில் இருந்துவந்த வெறுப்பும், துர்அபிப்பிராயமும் நீங்கிவிடவே, இவரும், உயர்தரகலாசாலை ஒன்றில் ஆசிரியையாய் இருந்துவருகின்ற இவர் மனையாரும் வண. மேர்பிசுவாமியாரால்ஞானதீட்சைஅருளப்பெற்றுக் கத்தோலிக்கராகி யிருக்கின்றனர். இவர்களின்மக்கள் இருவரும்தற்போது ஞானஸ்நானம்பெற ஆயத்தஞ்செய்துவருகின்றூர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை மாதம்

**பொதுக்கருத்து:** சற்பிரசாதத்தைப்பற்றிய அறிவுபெருகி அதன் வழியாகச் சிறுவர் அதிகமதிகமாகக் குருத்துவத்தை மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** இலங்கையிலே திருச்சபை நாளடைவில் அதிகமதிகம் மதிப்புப்பெறும்படியாக மன்றுடிக்கொள்வது.

சத்திய வேத
**பாதுகாவலன்**

1958-ம் ஆண்டு
வைகாசிமாதம் 1-ந் திகதி

# மேதினமும் மேமாதமும்

இன்று மேமாதம் 1-ந்திகதியாகும். உலகமுழுவதும் இன்று தொழிலாளர்தினம் கொண்டாடப்படுகிறது. ஆனல், கத்தோலிக்கஉலகமுழுவதும் இன்று தொழிலாளியான — தொழிலாளர்களுக்கு மாதிரிகையான— தொழிலாளரின்பாதுகாவலரான அர்ச். சூசையப்பர்திருநாளைக் கொண்டாடுகின்றது. ஏனெனில், அவர் நமது இரட்சகரின் கைத்தாதையாயிருந்து தமதுகைகடுக்க, மெய்வருந்த உழைத்துத் திவ்வியயேசுவையும், அவர்திருத்தாயாரையும் தாபரித்ததுபோல் தேவசமுகத்திலே தமது வல்லமையுள்ள மன்றாட்டினல் ஒவ்வொருகிறீஸ்துவனுக்கும், ஒவ்வொருகிறீஸ்துவதொழிலாளிக்கும் அவர் கைத்தாதையின் கடமையை நிறைவேற்றுகிருர்.

பாலஇரட்சகரை ஏரோதனிடமிருந்து காப்பாற்றித் தூரமான எகிப்தில் பராமரித்ததுபோல இப்பொழுதும் தமதுகாவலுக்குரியவர்களை ஆபத்துகளினின்று தற்காத்து அவசியதருணங்களிலெல்லாம் அபயமளித்துக் கிறீஸ்துவர்களின் — கிறீஸ்துவதொழிலாளர்களின் காவலராய்விளங்குகின்ருர். அர்ச். சூசையப்பரின் பிரார்த்தனையை நாம்சொல்லும்போது, "தொழிலாளிகளுக்கு மாதிரிகையே," "குடும்பங்களுக்குத் தாபரமே" என்று அவரை வேண்டிக்கொள்கிருேம். 12-ம்பத்திநாதர்பாப்பரசர் தொழிலாளியான அர்ச். சூசையப்பர்திருநாளைப் பிரசித்தஞ்செய்து, இத்திருநாளைத் தொழிலாளர்தினமாகியவைகாசிமாதம் 1-ந்திகதியன்று பெரிதுஞ் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமெனக் கட்டளையிட்டார். ஆம், அர்ச். சூசையப்பர் நெற்றிவியர்வைசிந்தக் கைத்தொழில்செய்து திருக்குடும்பத்திற்கு ஓசீவனம் தேடியபோதும், அவர்பலங்குன்றுங்கால் திருக்குமாரன் அதைத் தொடர்ந்துசெய்யப் பயின்றபோதும் கைத்தொழில் உயர்வடையலாயிற்று.

நிற்க, தொழிலாளரின் மேதினமாகிய — தொழிலாளியான சூசைமாமுனிவரின் திருநாளாகிய மேதினமன்றே தேவதாயாரின்வணக்கமாதமாகிய மேமாதம் ஆரம்பமாகின்றது. கைத்தொழில்செய்து, கஷ்டப்பட்டுழைத்து மாதாவையும், அவர்திருமகனுரையும் பராமரித்து, அவர்களுக்கெல்லாம் முன்னேடியும், பாதுகாப்புமாயிருந்துவந்த அர்ச். சூசையப்பரின் திருநாளன்று மாதாவின் வணக்கமாதம் ஆரம்பமாவது. மாதவன் பக்தர்களுக்கும், மாதாபக்தர்களுக்கும் பெரிதும் ஆனந்தம் உண்டுபண்ணுவதாகும். எக்காலத்திலும்பார்க்க இக்காலத்திலே அர்ச். சூசையப்பருடையவும், அவருடையதிருப்பத்தினியான பரிசுத்ததேவதாயாருடையவும் அனுக்கிரகமும், பாதுகாப்பும் திருச்சபைக்கு மாத்திரமல்ல, முழுஉலகத்துக்குமே அவசியம் தேவைப்படுகின்றன. திருச்சபையையும், முழுஉலகத்தையும் பாதுகாப்பதில் மரியன்னையின் பின் அர்ச். சூசையப்பரே முதலிடம்வகிக்கின்ருர். "உமதுபரிசுத்தபத்தினியின் உதவியை மன்ருடினபின்பு உமதுஅடைக்கலத்தை நம்பிக்கையுடன் வேண்டிக் கொள்ளுகின்ருே" மென்று நாம்சொல்லும்செபமே இதற்குச் சான்ருகும்.

எமதுநாட்டில் மாத்திரமல்ல, உலகிலுள்ள மற்றும் எத்தனையோ நாடுகளிலும் அமைதிகலைந்து, சமாதானம்குலைந்து, வேலைநிறுத்தங்கள், உள்நாட்டுக் கலகங்கள், அரசியற்கொந்தளிப்புகள், யுத்தகலவரங்கள் ஆதியன தலைவிரித்தாடிக்கொண்டிருக்கின்ற இச்சந்தர்ப்பத்திலே "உலகசமாதானம் ஓர்நூல்இழையில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது; ஒருவரின் அகஸ்மாத்தான ஒருசிறுதவறுதானும் அணுயுத்தம்ஆரம்பமாக அடிகோலிவிடலாம்; சமாதானமா, யுத்தமா என்றபிரச்சினையே இப்போதுளம்மை எதிர்நோக்கியுள்ளது; சமாதானம்பற்றிப் பேசும் போதுதானும்யுத்தவாடைசம்பாஷணைகளில் பிரதிபலிக்கிறது" என்று உலகஅரசியற் தலைவர்களில்ஒருவர் கூறியிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே— நாலாபுறமும் மனிதவர்க்கத்தைச் சஞ்சலத்திலும், பயங்கரத்திலும் ஆழ்த்திவிடக்கூடிய கார்மேகங்கள் அங்கங்கெல்லாம் கவிந்துகொண்டிருக்கின்ற இச்சந்தர்ப்பத்திலே "காரிருள் ஓட்டிப் பேரொளி காட்டும் தாய்மரியான தாரகை"யின் வணக்கமாதம் பிறக்கின்றது. பூலோகமாகிய இக்கண்ணீர்க்கணவாயிலே வாழ்கின்றநாம் எமது ஆபத்துஅவசியங்களில் பரலோகத்தை ஏறெடுத்து, கிருபைதயாபத்துக்குமாதாவாகிய எங்கள்இராக்கினியே, எங்கள் சீவமே, எங்கள்மதுரமே, எங்கள் தஞ்சமேயென்று அபயமிட்டு உதவிக்குஓடிப்போகின்றமாதாவின்வணக்கமாதம் உதயமாகின்றது. ஆதலால், நாம்மனந்தளராது வழமைபோல வணக்கமாதத்தைப் பக்திச்சிறப்பாய்க் கொண்டாடுவோம்! பாத்திமாபதியில் மாதாகாட்சியளித்துக் கூறியநன்மதிகளை நமது மனக்கண்முன்வைத்து, அலைகடல்போன்று நிலைதளர்ந்துகொண்டிருக்கும் இந்தஉலகுக்குச் சமாதானமும், அமைதியும் பெற்றுத் தந்தருளுமாறு அவரைச் சதா இரந்துமன்ருடுவோம்!

## வேலை நிறுத்தம்

கொழும்பிலே துறைமுகத்திலும், அரசாங்க காரியாலயங்களிலும், வர்த்தக-தொழில் ஸ்தாபனங்களிலும், மற்றும்தோட்டப் பகுதிகளிலும் பலதினங்கள் தொடர்ந்தும், இடையிடையேயும் வேலைநிறுத்தங்கள் இதுவரை நடைபெற்று வந்திருக்கின்றன. ஆனல், இப்போது அரசாங்க ஊழியர் தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்தவர்களும், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்தவர்களும் செய்துள்ளவேலைநிறுத்தமானது அகில - இலங்கை வேலைநிறுத்தமாகக் காட்சியளிக்கின்றது. மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்ததுமுதல் வேலைநிறுத்தம், வேலைநிறுத்தமென்று பத்திரிகைகளில்படித்தேபடித்துக் கண் அலுத்துப்போய்விட்டது. மனம் சலித்துப்போய்விட்டது. அம்மம்மா! 750தினங்களில் 400-க்கு மேற்பட்டவேலைநிறுத்தங்கள்! இவற்றிற்கெல்லாம் முடிசூட்டியவாருய்த் தற்போது நடைபெற்றுவரும் அரசாங்கஊழியர்களின் பாரியவேலைநிறுத்தமானது நாடுமுழுவதையுமே அதிரச்செய்து கலக்கிக்கொண்டிருக்கிறது. கச்சேரிகளிலோ, தந்தி–தபாற்கந்தோர்களிலோ, நீதிஸ்தலங்களிலோ, ஆஸ்பத்திரிகளிலோ, புகையிரதநிலையங்களிலோ, அரசாங்க பகுதிக்காரியாலயங்களிலோ, மற்றும்பல ஸ்தாபனங்களிலோ சேவைகள்சீர்குலைந்து காணப்படுகின்றன. அம்மட்டா! வெடிகுண்டுவீச்சுகள், கல்வீச்சுகள், கைகலப்புகள், தந்திக்கம்பிகளைத் துண்டித்தல், புகையிரதப் பாதைகளில் டைனமைற்வெடிகள், சிலிப்பர்க்கட்டைகள், கற்கள், மரக்கட்டைகள்வைத்தல் முதலாம் சதிமுயற்சிகளுக்கும் குறைவில்லை. வேலைநிறுத்தகாரர்கள் மீண்டும்வேலைக்குத் திரும்பினுலொழிய அரசாங்கஊழியர் தொழிற்சங்க சம்மேளனத்துடன் எவ்விதபேச்சுவார்த்தையும் நடத்துவதில்லையென்பது மந்திரிமார்கள்கூடி ஆலோசித்துச் செய்துள்ளமுடிவாகும். பிரதமர் சம்மேளனப் பிரதிநிதிகளைச்சந்தித்துப்பேசி ஊழியர்களின் குறைகளை நிவிர்த்திசெய்தாலொழிய அரசாங்கஊழியர் தொழிற்சங்கசம்மேளனம் வேலைநிறுத்தத்தைக் கைவிடாதென்பது சம்மேளனகாரியதரிசி தெரிவித்துள்ள செய்தியாகும். இந்நிலைமையில் தமிழரசுக்கட்சியாலேயே இந்தவேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதென்று அக்கட்சி மீதும், வேலைநிறுத்தத்தில்கலந்துகொள்ளுமாறு அரசாங்க பகுதிகளுக்குத் தலைவர்களாயுள்ள தமிழர்களே அரசாங்கஊழியர்களைத் தூண்டுகின்றனரென்று அவர்கள்மீதும் மந்திரிமார்சிலரும், புத்தகுருமார்சிலரும், பிறரும் பழிசுமத்த முற்பட்டிருக்கின்ருர்கள். இவர்களிலும் கல்விமந்திரி டபிள்யு. தஹநாயகா தமிழர்களைப் பெரிதும்இழிவாகப் பேசியிருப்பது எரிகிறநெருப்பில் எண்ணெய்ஊற்றியதுபோன்றசெயலாகும். கல்விமந்திரிகூறிய இந்த இழிமொழிப்பிரயோகம் இன்று நேற்றுப்பிறந்ததல்ல. தனிச்சிங்களசட்டம் நிறைவேறியகால முதல் தமிழர்கள்பால் கூறப்படும் வசைமொழி இதுவாகும். ஆனல், அவர் பேசியதைக்கேட்டுநின்ற சிங்களஅரசாங்க ஊழியர்கள் அவருக்குத் தகுந்தபதிலளித்து அவரைவாய்மூடப்பண்ணியமை பாராட்டத்தக்கதே.

## மொழிப்பிரச்சினை தீரவழி

"பெரும்பான்மைமக்கள் தங்கள் ஆதிக்கத்தைச் சிறுபான்மை மக்கள்மீது திணிப்பதன்மூலம் மொழிப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. அதனல், தற்பொழுது நாட்டில் மொழிப்பிரச்சினை காரணமாக ஏற்பட்டுள்ள கலவரத்தை நீக்கித் தமிழ்ப்பேசும் மக்களின் பீதியைப் போக்க அரசாங்கம் சிநேகபூர்வமான முறையிலே பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும்."

"வகுப்பு வெறியர்களால் மக்களுக்கு எந்தநேரத்தில் என்னஆபத்து ஏற்படுமோவென்று அஞ்சவேண்டியநிலையில் இன்று எமது நாடு சென்றுகொண்டிருக்கின்றது. அமைதிக்கும், சமாதானத்திற்கும் பிறப்பிடமான இலங்கையில் குழப்பமான சூழ்நிலை உருவாகியுள்ளது. நீண்டகாலமாகத் தோளோடு தோள்நின்று நாட்டின்முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டுழைத்த தமிழ்–சிங்களச் சகோதரர்களிடையே இனத்துவேஷம் தலைதூக்கியிருக்கிறது. பெரும்பான்மைச் சமூகத்தினர் சிறுபான்மையினரைச் சந்தேகக்கண்கொண்டு பார்க்கின்றனர். ஒருசில பிற்போக்குச்சக்திகள் இந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கலகத்தைஉண்டாக்க முற்பட்டிருக்கின்றன. தவருனபாதையில் செல்லும் சிங்களமக்களின்மனதை மாற்றவேண்டும். சமசமாஜகட்சி ஏற்கனவே அறிவித்துள்ளபடி சிங்களத்துக்கும், தமிழுக்கும் சமஅந்தஸ்து வழங்குவதைத்தவிர இப்பிரச்சினையைத்தீர்க்க வேறுவழியில்லைஎன்பதைப் பொதுமக்கள் உணரச்செய்யவேண்டும். இப்பிரச்சினையைத்தீர்க்க வகுப்புவாதஅடிப்படையில் போராடுவது ஆபத்தானது"

"வகுப்புக் கலவரங்களை இந்நாட்டில் உற்பத்திசெய்தது தனிச்சிங்களசட்டமேயாகும். தனிச்சிங்கள சட்டம் தோன்றியிராவிடில் இந்நாட்டில் முன்போல எவ்விதகுறையுமின்றித் தமிழ்மக்களும், சிங்களமக்களும் சகோதரதரமனப்பான்மையோடு இலங்கையின்நலனுக்காக வாழ்ந்திருப்பார்கள். தனிச்சிங்களசட்டம் இருக்கும்வரையில் இந்தநாட்டில் வகுப்புக்கலவரங்கள் தோன்றிக்கொண்டேயிருக்கும். சிலவகுப்புவாதிகளினுல் இலங்கைமுழுவதும் இன்று கலக்கமடைந்துள்ளது. என்ன நடக்குமோ? எப்படிமுடியுமோ? என்று மக்கள் ஏங்கிக்கொண்டிருக்கிருர்கள்."

மேலே நாம் எடுத்துக்காட்டியவைகள் இந்நாட்களிலே பிரமுகர்கள்சிலரால் எடுத்துக்கூறப் பட்டனவாகும். நிற்க, சென்ற சனிவாரம் இரத்தினபுரியிலே முன்னைநாள்பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பேசியபோது, "தமிழ்மக்கள் சிங்களவர்களுடன் சமாதானமாக வாழ்ந்துவந்தார்கள்; இந்த அரசாங்கம் அதிகாரத்துக்குவரும் முன் தமிழர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தங்கள்பாடசாலைகளில் சிங்களத்தைப் போதித்துவந்தார்கள். ஆனல், சிங்களத்தை அவர்களின் தொண்டைக்குள் திணிக்கும்விதத்தைத்தான் அவர்கள் வெறுக்கிருர்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



## அருமைச் சகோதரங்களே!

வைகாசிமாதம் வந்ததும் நீங்கள் மகிழ்ச்சி கொள்ளுகிறீர்கள். இதற்குக் காரணம் என்ன? நல்லமழை பெய்து, பசுமை காணப்படுவதாலா? மரங்களில் பூக்கள்நிறைய மலர்ந்திருப்பதாலா? குயில்கள் கூவுவதாலா? இல்லை. ஆனால், இது அன்னைமரியின் மாதம் — எங்கள் அன்பானதாயை விசேஷவிதமாக வந்தித்து வணங்கும் மாதமாய் இருப்பதேயாகும். மெய்யாகவே இது குதூகலம்நிறைந்த ஓர்மாதம். தேவதாய்க்குச் சந்தோஷம்நிறைந்த மாதம். ஏனெனில், இம்மாதத்திலே அவ விசேஷவிதமாய்ச் சங்கிக்கப்படுகிறு. இது எமக்கும் சந்தோஷம் நிறைந்த மாதம். ஏனெனில், மரியாய் "எங்கள் சந்தோஷத்தின் காரணம்."

ஆகையால், இம்மாதத்தில் நாம்செய்ய வேண்டியது என்ன? தேவமாதாவைக் குறித்து அனுசரிக்கக்கூடிய பக்திமுயற்சிகள் எல்லாவற்றையும் அனுசரிப்பதா? அல்லது முழுநேரமும் தேவமாதாவை வேண்டிக்கொண்டுஇருப்பதா? அல்ல. நாம் தேவமாதாபேரில் சாதாரணமாய் அனுசரித்துவரும் பக்திமுயற்சிகளை அதிக கவனத்துடனும், பற்றுதலுடனும், விசேஷமாய் அதிகநேசத்துடனும் அனுசரிக்கவேண்டும். நேசத்துடன் அனுசரித்தால்தான் அது சர்வேசுரனுக்கும், அவருடைய திருத்தாயாருக்கும் உவப்பாய் இருக்கும். இல்லாவிடின் எங்கள்செபம் எல்லாம் உபயோகமற்ற பதராகும். ஆகையால், செபங்களை உட்கருத்தோடும், பயபக்தியோடும் சொல்லிவாருங்கள்.

அண்ணை.

—(⌣)—

## மன்னரும் மதியூகியும்

ஓர்ஊரில் வீரசிம்மன்என்று ஓர் அரசன் இருந்தான். ஒருநாள்அவனிடம் மதியூகிஎன்பவன்வந்து, "அரசே, நான் ஒருஏழை. கருணைகூர்ந்து எனக்கு ஏதாவது ஒருவேலைதர வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

அதற்கு வீரசிம்மன், "உனக்கு என்னென்ன செய்யத்தெரியும்?" என்று கேட்டான். "மகாராஜா, எனக்குநான்குவேலைகள் செய்யத் தெரியும். முதலாவதாக, எவ்வளவு சந்தடியிலும் அயர்ந்துதூங்கத்தெரியும். இரண்டாவதாக, எல்லோரும் அயர்ந்து உறங்கும்போது நன்ருய்க் காவல்காக்கத் தெரியும். மூன்ருவதாக, பலவகைப்பானங்களைக் கலந்துவைத்தால், அவை இன்ன இன்னஎன்று ருசிபார்த்துச் சொல்லத்தெரியும். நான்காவதாக, விருந்துக்குஏற்ற நல்லவிருந்தாளிகளை அழைக்கத்தெரியும்" என்று பதில் சொன்னுன் மதியூகி.

இதைக்கேட்டதும் அரசனுக்குச் சிரிப்புவந்தது. அதோடுஆச்சரியமாகவும் இருந்தது. இருந்தாலும் அவன் திறமையைச் சோதித்துப் பார்க்க எண்ணினுன்.

முதலில், மதியூகியை அந்தஊர்ச் சந்தைக்கு அழைத்துப்போனுன். அந்தச் சந்தையில் அன்று ஒரே இரைச்சலாகஇருந்தது. அதோடு அதற்குப் பக்கத்திலேயே ஓர் உலைக்கூடமும் இருந்தது. அரசன் மதியூகியை நோக்கி, "நீ இங்கேசற்று நேரம்தூங்கு. பார்ப்போம்"என்று சொன்னுன். அவ்வளவுதான்! சில விநாடிகளில் நித்திரையில் ஆழ்ந்துவிட்டான் மதியூகி. வீரசிம்மனுக்கு இதுமிகவும் ஆச்சரியத்தைஅளித்தது.

சாயங்காலமானதும், அரசன்மதியூகியைஅழைத்து, "முதல்சோதனையில் தேறிவிட்டாய். இனிஇரண்டாம் சோதனையைப் பார்ப்போம். இன்று இரவு நீ அரண்மனையைக் காவல்காக்கவேண்டும்" என்ருன். "சரி" என்று அவ்வாறே காவல்காக்க ஆரம்பித்தான்அவன். மதியூகியைப் போய்க் கவனிக்கும்படி அரசன்பல ஆட்களை ஒவ்வொருமணித்தியாலமும் அனுப்பினுன். யார்வந்து பார்த்தபோதும், அவன்உருவினவாளைக் கையில்பிடித்தபடியே, கண்கொட்டாமல் காவல்காத்துக்கொண் டிருந்தான். இதைக்கேட்ட அரசனுக்கும் அவனுடையதிறமையில் நம்பிக்கை ஏற்பட்டது.

பிறகு அரசன் ஒருகிண்ணத்தை அவனிடம்கொடுத்து, "இதோ, இதில் உள்ளத்தைக் குடித்துவிட்டு உன்அபிப்பிராயத்தைச்சொல், பார்ப்போம்" என்ருன்.

மதியூகி அதைக்குடித்துவிட்டு, "நன்ருய் இருந்தது. நன்ருய்இருக்கிறது. நன்ருய்இருக்கும்" என்ருன்.

அதைக்கேட்டஅரசன், "மதியூகி, நீ சொல்வது விளங்கவில்லையே. விளங்கும்படி தெளிவாய்ச்சொல்" என்ருன்.

அதற்கு மதியூகி, "அரசே, இதோ இந்தக்கிண்ணத்திலே புளித்த பழையமோரையும், இன்றுகடைந்த புதியமோரையும், சிறிதுநேரத்திற்குமுன் உறைகுத்தியபாலையும் ஒன்ருகக் கலந்திருக்கிருர்கள். புளித்த மோர் ஒருகாலத்தில் நன்ருய்இருந்தது. இப்போதே கடைந்தமோர் இன்றுநன்ருய் இருக்கிறது. உறைகுத்தினபால் இனிமேல் நன்ருய் இருக்கும். அதுதான் அப்படிச் சொன்னேன்" என்று பதிலளித்தான்.

இதைக்கேட்ட அரசன் மிகுந்த சந்தோஷம்அடைந்து, "இதிலும் தேறிவிட்டாய். இனி ஒருசோதனைதான் பாக்கியிருக்கிறது. சரி, நான் விருந்துவைக்கிறேன். நீபோய்த் தக்கவிருந்தாளிகளை அழைத்துவா?" என்ருன்.

மதியூகிபோய் அரசனுடைய விரோதிகள் அனைவரையும் தேடிப்பிடித்து விருந்துக்கு அழைத்துவந்தான். அதைக்கண்டஅரசன் வியப்பும்கோபமும் அடைந்தான். அவனைத்தனியே அழைத்துப்போய், "இவர்களா தக்கவிருந்தாளிகள்? இவர்கள் என்விரோதிகளல்லவா? இவர்களைப்போய் உன்னையார் அழைக்கச்சொன்னது?" என்று கோபமாகக்கேட்டான்.

அதற்குமதியூகி வணக்கமாக, "அரசே, இவர்களே தக்கவிருந்தாளிகள். இனிஇவர்கள் உம்முடைய விரோதிகள்அல்லர். நீங்கள் பழைய விரோதத்தைமறந்து தங்களின் அன்புடன் விருந்திற்கு அழைத்தீர்கள் என்று கேட்டவுடனேயே இவர்கள் யாவரும் உங்களுக்குச் சிநேகிதர்களாகிவிட்டனர்" என்றுசொன்னுன்.

<u>சுவிசேஷ விளக்கம் — 7.</u>

## பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுதல்

"பூமிமுழுவதையும் நான் சுதந்தரித்துக் கொள்ளுவது எப்படி?" என்றுகேட்டான் மோகன். சந்திரசேகரம் இரட்சகர்கலாசாலையின் விளையாட்டு ஆசிரியர். தம்முடைய மோட்டர்வண்டியின்காற்றுப்போயிருந்த சில்லுஒன்றைத் திருத்திக்கொண்டிருந்தார். "என்னமோகன், என்னைத் தோற்கடிக்க எண்ணுகிருய்போல் இருக்கிறது?"

உண்மைதான் என்ருன் துரை, மோகனுடைய நண்பன். மோகனும், ஆசிரியரும் காற்றுப்போன 'ரியூப்'பை ஒட்டும்முயற்சியை அவதானித்துக் கொண்டிருந்தான் துரை.

அர்ச். அக்குயினுதோமையார் உன் கேள்விக்கு மறுமொழி தந்திருக்கிருர் என்ருர் ஆசிரியர் சந்திரசேகரம். பூமியைவிடப் பளுவானது எதுவும் உண்டா? இல்லை அந்த 2-ம் பாக்கியத்தில் பூமிஎன்றது பரமபொக்ஷத்தின் உறுதியான தாபரம் அல்லது அத்திவாரம்என விளங்கவேண்டும்.

இவ்வளவும் விளங்குகிறது ஸார் என்று சிரித்தான் மோகன். "சுதந்தரித்துக்கொள்ளும் பகுதிதானே சிக்கலாயிருக்கிறது" என்ருன்.

அது எப்படியென்ருல் — காற்றடிக்கிற பம்பைஎடு — எப்படியென்ருல் நாம் எங்களை அடக்கிஆள அறிந்துகொண்டால் பரமபொக்ஷத்தைச் சுதந்தரிக்கவேண்டிய தாபரத்தை அல்லது அத்திவாரத்தைத் தேடிக்கொண்டோம். உதாரணமாக, கோபத்தை அடக்கும்பொழுது இந்த ரயர் வெடித்ததுபோல நாம்வெடிக்கமாட்டோம். எல்லாவற்றிலும் தெய்வசித்தத்துக்குப் பணிந்துநடப்போம். அதுதான்பக்தி. மேலும், இந்தப்பாக்கியத்தை நாம் எமதுசீவியத்தில் கடைப்பிடிக்கும் பொருட்டு தூயஆவியானவர் தமது விசேஷ கொடையால் எமக்கு உதவிபுரிகிருர். அந்தக்கொடைதான் பக்தி. அது தேவசித்தத்துக்கு நாம்பணிந்துநடக்க உதவிசெய்கிறது.

துரை சிரித்தவண்ணம்: "என்ன ஸார் நீங்கள் ஒருகுருவானவர்மாதிரிப் பேசுகிறீர்கள்" என்ருன்.

ஆசிரியர் ரியூப்பில்உள்ள ஓட்டையை ஒட்டுவதற்காக அவ்விடத்தில் சொலுசன் பூசிக்கொண்டிருந்தார். பேசக்கூடாதா? மோகன் காற்பந்தடியில் வீரமடைய வேண்டுமென ஆசித்து அதைப்பற்றி ஆராய்ந்து அறிகிருன். அறிந்து திறமாய் விளையாடப் பார்க்கிருன்.

"மதஅலுவலிலும் அப்படித்தானு?" என்ருன் மோகன்.

அப்படியேதான் என்ருர் ஆசிரியர். அதைப்பற்றி அறியக்கூடியதெல்லாவற்றையும்வரையறைவாய் அறியவேண்டும். கிறீஸ்துநாதரைப் போலப் பூரணமாகஆகிறதற்கு அவரைப்பற்றி நன்ருக அறியவேண்டும்.

"அவரும் அப்படித்தானே சொன்னுர்" என்ருன் துரை.

எப்படி எனக்கேட்டான் மோகன். "நான் சாந்தமும், இருதயத்தாழ்ச்சியும் உள்ளவனுகஇருக்கிறேன் என்று கற்றுக்கொள்ளுங்கள்" என்ருர் யேசுபெருமான். இது உனக்குத் தெரியாதா?

அதைப்பற்றித்தானே நாங்களும் பேசினேம் என்ருர் ஆசிரியர் சந்திரசேகரம். ரியூப்பை ஒட்டிமுடித்துக்கொண்டு "சாந்தமும், தாழ்மையுமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்ருர்.

"வருந்திச் சுமை சுமந்திருக்கிறவர்களாகிய நீங்களெல்லோரும் என் அண்டையில் வாருங்கள், நான் உங்களைத் தேற்றுவேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு நான் சாந்தமும், மனத்தாழ்ச்சியும் உள்ளவனுயிருக்கிறேனென்று என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்போது உங்கள் ஆத்துமங்களுக்கு இளைப்பாற்றியைக் கண்டடைவீர்கள். ஏனெனில், என் நுகம் இனிதாயும் என்சுமை இலகுவாயும் இருக்கிறது." (மத். 11: 28-30)

—(⌣)—

## யேசுவுக்காக

அர்ச். கமிலஸ் பாலியவயதில் பரிசுத்ததனத்தைக்காட்டவில்லை. தகப்பனுல்கெடுக்கப்பட்டார். அர்ச். வின்சென்ற் டீ போல் சிறுபிராயத்தில் பன்றிமேய்த்தார். குருவானபின் கப்பற்கொள்ளைக்காரனின் கைதியானுர். எசமானை மனந்திருப்பியபின் அவனுடன் பிரான்சிற்குத் தப்பியோடினுர். அர்ச். ஜெரோம் எமிலியான் படைத்தலைவனுய் இருந்தவர். சண்டையிற்பிடிபட்டுக் கைதியாய் இருக்கும்பொழுது தேவதாயாரின் உதவியால் தப்பினுர்.

கமிலஸும், எமிலியானும் மனந்திரும்பியபின்னர் பிறர்சிநேகஊழியத்தில் ஈடுபட்டார்கள். வின்சென்ற் டீ போலும் அவ்விதமே செய்தார். கமிலஸ் வைத்தியசாலைகளில் நோயாளிகளை — விசேஷமாய் மரணத்தருவாயில் இருப்பவர்களைப் பராமரித்தார். எமிலியான் அனுதைகளாய் வீதிகளில்அலைந்துதிரியும் சிறுவருக்கு ஊண், உடை, உறைவிடங்கொடுத்து ஆதரித்தார். வின்சென்ற் மரக்கலங்களில் தண்டுவலிக்கும் அடிமைகளை ஆதரித்தார்.

மூவரும் சந்நியாசசபைகளை அடியிட்டனர். கமிலஸ் பிணியாளரைப் பராமரிக்கும் சகோதரர் சபையை உண்டாக்கினுர். வின்சென்ற் ஞான ஒடுக்கம் போதிக்கும் குருமார்சபையையும், பிறர்சிநேகக்கன்னியர்சபையையும் ஏற்படுத்தினுர். எமிலியான் சிறுவரைப் படிப்பிக்கும் ஆசிரிய சபைகளைஉண்டாக்கி அனுதைசாலைகளைக் கட்டினுர்.

இவர்கள் இப்படியேன் செய்தார்கள்? பிறரில் யேசுவைக் கண்டபடியால் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவத்தினால் வந்தகேடு

( சி. எஸ். நாயகம் — பத்தர்வத்தை, இளவாலை )

(சென்றவாரத் தொடர்ச்சி)

நமது ஆதித்தாயாகியஏவாள் ஓர் நாள் சாயரட்சை நறுமணங்கமழும் தென்றல் மனோகரமாக வீசிக்கொண்டிருக்கையில் அந்த இன்பத்தேன் பொழியும் சிங்காரத்தோப்பில் தன்னந்தனிமையாக உலாவுகின்றாள். அதன் வனப்புமிக்க காட்சிகளைப் பார்த்து ரசிக்கின்றாள். அப்பொழுது ஓர்பிசாசு நாகசர்ப்பத்தின் ரூபமெடுத்து அங்கிருந்த விலக்கப்பட்டமரத்தின் அடியைச்சுற்றிக்கொண்டு அப்பக்கம்வந்த ஏவாளுடன் இச்சகவார்த்தை பேசுகின்றது. அவளை ஏமாற்றுகின்றது. அவளைக்கொண்டு அம்மரத்தின் கனியைப் புசிக்கச்செய்கின்றது. அவள் மூலம் அவளுடைய கணவனாகிய ஆதாமையும புசிக்கச் செய்கின்றது. அக்களிப்பு மிகுதியால் ஓரேதுள்ளாய்த்துள்ளி நரகத்தில் குதிக்கின்றது பிசாசு. விடிந்தது கேடு! விழுந்தது சாபம்! "மண்ணாய்இருக்கிறாய், மண்ணாய்ப்போவாய்." இதுவே மனுக்குலத்தின் தலைமீது கோடைஇடிபோல வீழ்ந்தசாபம்! மரண தண்டனை! சாகாவரம், நோகாவரம்பெற்ற மனிதன் இப்போதுமரணத்துக்கும், நோக்காடுகளுக்கும் உள்ளாயினான். மோட்ச உரிமை பறிமுதலாயிற்று. பரலோக வாசல் அடைக்கப்பட்டது. நரகவாசல் திறக்கப்பட்டது.

"நீங்கள் இந்த ஒரேயொரு மரத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்" என்ற ஒரேயொரு தேவகட்டளையை ஒரேயொருகால்மாத்திரம் மீறிச்செய்த ஒரேயொருபாவத்துக்குத் தண்டனையாக இந்தத்தீர்வை. நமதுஆதிப்பெற்றோர் உண்ட இந்தப்பழத்தின் நஞ்சு நரம்புகள்வழியாக அவர்களின் தேகமெங்கும் சுவறியது. இரத்தத்தில்கலந்தது. அவர்களின் பிள்ளைகளாகிய மனுக்குலத்தவர் அனைவர்க்கும் தொற்றியது. முன்சொன்ன சாபத்துக்கும், தண்டனைக்கும் உள்ளானோம். பரலோகத்தில் உற்பத்தியான பாவம்எனும் இந்தஅக்கினி பூலோகத்திலும் பற்றிப்பிடித்தது. பரலோகத்தில் உற்பத்தியான பாவவிஷம் பூலோகத்திலும் சுவறியது. அம்மட்டா! ஆதிப்பெற்றோர் கட்டிக்கொண்ட கீழ்ப்படியாமை என்னும் ஒரேயொருபாவவிஷத்தால்—அத்தால்கிடைத்த தேவதீர்வையின் அதிர்ச்சியால் மனிதன் மாத்திரமல்ல ஆனால், "படைத்தான் படைப்பெலாம் மனுவுக்காக, மனுவைப்படைத்தான் தனைவணங்க" என்றபடி, அவனுக்கென்று உண்டாக்கப்பட்ட மற்றும்பிராணிகளும் இவ்வித துன்பங்களுக்கும், மரணத்துக்கும் உள்ளாயின. ஆயினும், இம்மட்டில் முடிந்ததா? இல்லை. இந்தப்பாவவிஷம் ஓர்உந்நத இரத்தப்பலியை—உயிர்ப்பலியைக் கேட்டுநின்றது. இரத்தத்தோடுகலந்த சீவபலியே இந்தப் பாவவிஷத்தைப் போக்கவல்ல அவுடதமும், பரிகாரமுமாயிற்று. அந்த இரத்தப்பலி—சீவபலிதான் என்ன?

## கல்வாரி மலை

இந்தமலை ஜெருசலேம்நகரின் புறக்கோடியிலே இன்றும் காட்சியளிக்கும் ஓர்சிறுகுன்று. சிங்காரத்தோப்பிலே நாகசர்ப்பம்என்ற அந்த நரகசர்ப்பம்தீண்டிய பாவவிஷம் இந்த மலையில்தான் இறக்கப்பட்டது. அது கேட்டபலி இந்தக்குன்றில்தான் கொடுக்கப்பட்டது. ஆயினும், அது மிருகபலியுமல்ல, மனிதபலியுமல்ல. ஆனால், தேவபலி. ஆம், தேவனுடையஇரத்தத்தையே—உயிரையே பலியாகக் கேட்டது. ஆனால், கடவுள் தமது தேவசுபாவத்தில் பாடுபடமுடியாது. மனிதசுபாவத்தில் மாத்திரமே அவ்வாறுசெய்யமுடியும். எனவே, தேவன் மனிதனாகிப் பலியாகவேண்டியவரானார். அந்தப்பாவவிஷம் அந்தஇரத்தப்பலியை — உயிர்ப்பலியை இலேசானமுறையில் கேட்கவில்லை. அதற்குப்பதில் மனிதன் முன்பின் என்றுமே கண்டுகேட்டிராதவகையில் நாவினால் உரைக்கமுடியாத பாடுகள், உபத்திரவங்கள் மூலமாகவே கொடுபடவேண்டுமென்று கேட்டது. அதனால் தேவன் மனிதனானார். படாதபாடுகளெல்லாம்பட்டார். கடைசித்துளிபரியந்தம் தமதுஇரத்தமெல்லாம் சிந்தினார். கடைசியாகச் சிலுவைமரத்தில் அந்தோ! சீவபலியானார் இந்தக்கல்வாரிமலையின் உச்சியிலே.

நமது ஆதித்தாய்தந்தையர் கட்டிக்கொண்ட ஒரேயொரு பாவத்திற்காக—அந்தப்பாவவிஷத்தைப் போக்கடிப்பதற்காகத் தேவன் இவ்விதம் மனிதனாகித் தமதுஉதிரமெல்லாம் சிந்தித் தமதுசீவனைப் பலியாகக் கொடுத்ததோடாகிலும் போதுமென்று விட்டதா? இல்லை. கல்வாரிமலைமீது நிறைவேறிய இந்தச்சிலுவைப்பலி பூலோகமுழுவதும் உலகமுடிவுபரியந்தம்இரத்தஞ்சிந்தாதவிதமாய் நிறைவேறிவரவேண்டுமென்று கேட்டது. அதன்படி நமது ஆலயங்களில் இச்சிலுவைப்பலி பூசைப்பலியாக அன்றுதொட்டு இடையறாது உலகமடங்கலும் தொடர்பாக நிறைவேறிவருகின்றது. உலகமுடிவுபரியந்தம் இவ்விதமே நிறைவேறிவரும். ஓர்வார்த்தையால் இப்பாவவிஷத்தைப் போக்கவல்லதேவன் இத்துணைபாடுகள், துன்பஉபத்திரவங்களை அனுபவித்துச் சிலுவைமரணத்துக்குள்ளாக வேண்டிய காரணம் என்ன? அவர் பாவத்தின்கொடுமையையும், மனுமக்கள்மீது தமக்குள்ள நேசப்பெருக்கையும், இரக்கப்பிரவாகத்தையும் காண்பிப்பதேயாகும்.

## அகங்காரமும் கீழ்ப்படியாமையும்

நிற்க, பரலோகத்திலே கெட்டுப்போன சம்மனசுகள் "அகங்காரம்" என்னும்பாவத்தை ஒரேயொருமுறைமாத்திரம் கட்டிக்கொண்டதற்குத் தண்டனையாகப் பெற்றுக்கொண்ட ஆக்கினையைக் கண்டோம். பூலோகத்திலே நமது ஆதிப்பெற்றோர் ஒரேயொருமுறைமாத்திரம் கட்டிக்கொண்ட "கீழ்ப்படியாமை" எனும்பாவத்திற்குத் தண்டனையாக வந்துற்றகேடுகளைக்கண்டோம். அவர்கள் ஒரேயொருமுறைமாத்திரம் கட்டிக்கொண்ட ஒரேயொருபாவத்திற்குத் தண்டனை இதுவானால் நாளிலும் பொழுதிலும் மனதாலும், வாக்காலும், கிரிகையாலும் ஒருமுறைஇருமுறை ஒருபாவம் இருபாவமல்ல, எத்தனையோ பாவங்களை எத்தனையோமுறை கட்டிக்கொண்டும் அச்சபயமின்றி, முன்பின்யோசனையில்லாது இருந்து வருகிறோமே! இதற்கெல்லாம் முடிபென்ன? நாம் முதன்முறைமாத்திரம்கட்டிக்கொண்ட ஒரேயொரு சாவானபாவத்தின் போது—அன்றேல் பலமுறைகளிலும் நாம் கட்டிக்கொண்டுவந்த சாவானபாவங்களின்போது நாம்தேவகரத்தில் சிக்குண்டிருந்தால் இன்று எமது கதிஎன்னவாயிருக்கும்! இதுபற்றித்தான்போலும் "சர்வேசுரனுடைய கரத்தில் அகப்படுவது மகாபயங்கரத்துக்குரிய காரியம்" என்றும், "ஆகையால், உங்கள் இரட்சணியத்தை என்றும் அச்சநடுக்கத்தோடு நிறைவேற்றி வாருங்கள்" என்றும் பவுல்அப்போஸ்தலர் எச்சரிக்கின்றார்.

தேவன் தமதுஇரக்கத்தின் சின்னமாகிய சிலுவைச் சிம்மாசனத்தில் இன்று வீற்றிருக்கின்றார். நமதுமனந்திரும்புதலை [illegible] பொறுமை[illegible] ஆனால், நாம் பொன்னான எமதுவாழ்நாளைப்பாவத்தினாலேமண்ணாக்குவோமானால்ஓர்காலம்வரும். அதுதேவனின் காலம். அந்தக்காலந்தான் நாம்கண்மூடும்நேரம். அப்போது நமதுஆவி பிரிந்ததும் அவர் தமதுநீதிச்சிம்மாசனத்தில் வீற்றிருந்து தமது இரக்கத்தின் சின்னமாகிய தாம் பாடுபட்ட திருச்சிலுவையைத் திருக்கரத்தில் கொண்டு கோணாதநீதி செலுத்துவார். தன்சகோதரனாகிய காயீனைப்பழிவாங்கும்படி ஆபேலின்இரக்கம் பரலோகமட்டாய்அபயமிட்டதுபோல் சிலுவையில்சிந்தப்பட்ட கிறீஸ்துநாதரின் திருஇரத்தமும்நம்மைப்பழிவாங்கும்படி பரலோகமட்டாய் அபயமிடும். எனவே, இவ்வித அவலத்தீர்வைக் குள்ளாகாதபடி காலமிருக்கும்போதே நாம் தேவன்பக்கமாய் மனந்திரும்பிப் பாவத்தைவெறுத்துப் புண்ணியத்தைச்செய்து மோட்சகரை சேர இயன்றமட்டும் வருந்துவோமாக.

சுபம்!

# மனிதசமூகத்தை ஒற்றுமைப் படுத்தும்சாதனம் - தொழில்

— எம். ஜே. எம். —

ஓரிடத்திலே மூன்றுகற்சிற்பர் கல்வெட்டிக்கொண்டிருந்தனர். அவ்வழியாகச்சென்ற வழிப்போக்கன் ஒருவன் அவர்களில் ஒருவனை விழித்து "என்ன செய்கிறாய்?" எனக்கேட்டான். அதற்குஅவன "கல்வெட்டுகிறேன்"எனப் பதில்கூறினான். இரண்டாம் ஆளிடத்திலும் அதே கேள்வியைக்கேட்டான் வழிப்போக்கன். "ஜீவனந் தேடுகிறேன்" என்றான். மூன்றும் ஆளிடத்திலும் அதே கேள்வியையே பொறித்தான். "ஆலயம் கட்டுகிறேன்" என்றான்.

எமதுதொழிலில் அதிகமான வருவாயையும், கௌரவத்தையும் தேடுகிறநாம் "ஆலயங்கட்ட" வேண்டியவர்கள். நாம்அனைவரும் எமதுதொழிலால் கடவுளுக்குச் சங்கையும், சிறப்பும்கொடுக்க உணர்ச்சியுடன்உழைக்க வேண்டும்.

இவ்விலட்சியம் நிறைவுபெற எமது காலைக் காணிக்கை போதுமானது அன்று. அப்படியாயின் இவ்விலட்சியத்தை அடைவதுஎப்படி?

## பிறரில் கடவுட்சேவை

சீயென்னு கத்தறின்அம்மாள் பதினான்காம் நூற்றாண்டில் சீவித்தவள். தேவஇரகசியங்களை நன்கறிந்தவள். ஒருமுறை பரவசமுற்றபொழுது எமதுநாதர் அவளுக்குச் சொல்வார்: "நீ எனக்கு ஒருசேவையும் செய்ய முடியாது; ஆயினும், உனது அயலானுக்குச் சேவைபுரியலாம்; எனது சத்தியத்தை அறிந்தஆன்மா ஓய்வின்றிப் பிறருக்குஉதவிசெய்ய முயலும்; நான் கொடுத்த அளவு அன்பை நீ எனக்குத் திருப்பிக்கொடுக்க மாட்டாய்; ஆகவே, எனக்குச்செய்ய முடியாததை உன் அயலாருக்குச் செய்; அவர்களுக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்ததாகும்" என்றாராம்.

மனிதன் தன்சுயநலத்துக்குப் பல வழிகளால் தன்னை அடிமையாக்கலாம். தன்தொழிலால் கடவுளுக்கும், தன் அயலானுக்கும் சேவைசெய்ய அறியாமற்போவதே அதிகேவலமான அடிமைத்தனம். மக்கள் யாவரும் ஏதோஒருதொழில்செய்ய வேண்டியவர்கள். அதில் எமதுவாழ்க்கையின் அதிகமானபங்கைச் செலவிடுகிறோம். வீட்டிலோ, வெளியிலோ சொந்த வர்த்தகனாகவோ, அரச ஊழியனாகவோ, முதலாளியாகவோ, தொழிலாளியாகவோ, கைத்தொழிலாளியாகவோ, உத்தியோகஸ்தனாகவோ நாம் தொழில்பார்க்க வேண்டியவர்கள்.

## பிறரைச் சார்ந்தவர்கள்

சிலநூற்றாண்டுகளின்முன் அதிகமானமக்கள் வீட்டில் அல்லது அண்மையில் வேலைசெய்து வந்தார்கள். எனவே, அவர்கள் அயலாரை இலகுவாக அறியமுடிந்தது. அயலாரின் உதவி அவசியமெனஅறிவது இலகுவாய் இருந்தது. கிராமத்திலிருந்த தொழிலாளர் தங்கள்தேவைக்கு அயலாரையே எதிர்நோக்கினர். இயந்திரத்தொழில்மிகுந்த சமூகத்தில் இன்றுநாம் வாழ்ந்தபோதிலும், அயலவரின்உதவி எமக்கு அதிகம்தேவைப்படாமலில்லை. முற்காலம் பருத்தித்துறையிலிருந்தநான் பட்டணஞ்செல்ல வேண்டியிருந்தால் என்னுடைய எருத்துமாடுகள் நல்ல நிலைமையில் இருக்கின்றனவாஎன்று அறிந்தால் போதும். வண்டி கட்டிக்கொண்டு வந்துசேர்ந்து விடுவேன். இன்று அதேபயணத்திற்குப் பஸ்வண்டிசெய்யும் ஆங்கில கம்பெனிகாரர் தொடக்கம் இ. போ. ச. இன் "கிளீனர்" தொழிலர்ளிவரை நூற்றுக்கணக்கானமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது.

உழுதுண்டுவாழும் கமக்காரன் அதிகசுதந்திரத்தை அனுபவிப்பவனாகக் கருதப்பட்டது அந்தக்காலம். உணவுமந்திரி தொடக்கம், "வூல்ஸ்வி பம்ப்" விநியோகஸ்தர்வரை உள்ளோரின்தயவை அவன் காத்திருக்கவேண்டியது இந்தக்காலம். பேரறியாத பேரறிவாளர் தொடக்கம் அநேகமக்களில் எம்வாழ்க்கை தங்கியிருக்கிறது. "ஒருவர்ஒருவரை நேசியுங்கள்"என்று எம்பெருமான் சுவிசேஷத்தில் விடுத்தகட்டளைக்கு இதுதான் பதில்போலும். எனவேதான் தொழில் மனிதசமூகத்தை ஒன்றுபடுத்தும் சாதனமாகக் கருதப்படுகிறது. "சிருட்டிகரினதும், இரட்சகரினதும் தேவைகளுக்கு மக்கள்எல்லோரையும் ஒற்றுமைச்சேவையில் ஈடுபடுத்துவது தொழில்"என்றார் 12-ம்பத்திநாத பாப்பரசர்.

## ஒற்றுமைச்சாதனம் தொழில்

பல்வேறுதொழில்களின் ஒத்துழைப்பையும், அதினால்மக்களின் ஒருமைப்பாட்டையுமதேட நாம் தயங்கவேண்டியதில்லை. அதனால், பொதுவுடமைப்பூச்சாண்டி வந்துவிடுமென அஞ்சவேண்டியதில்லை. பொதுவுடமை உலகத்தைப் போர்க்களமாயன்றி ஓர் ஒத்துழைப்பு நிலையமாய் எவரும் நோக்குவதில்லை. முதலாளிக்கும், தொழிலாளிக்குமிடையிலே வேற்றுமையைவளர்த்துச் சமூகத்தைக் கூறுபடுத்தி வேறுபடுத்துவதே அதன் குறிக்கோள்.

வகுப்புப் போராட்டத்தையல்ல, தனிப்போரையே நாம்அஞ்சி ஒடுக்க வேண்டியிருக்கிறது. நாம் தனித்து வாழவேண்டும்; நான் சம்பாத்தியந் தேடவேண்டும்; நான்உயர்ந்து உச்சநிலை அடையவேண்டும்; "யார்குடி கெடினும், நீ குடிமிளகுசாறு" என்றமனப்பான்மையை நாம் அறவே ஒழித்துப் பிறர்நலம்பேணி வாழ வேண்டியது அத்தியாவசியம்.

## இலாபமும் சேவையும்

அப்படியாயின் தன்னயம்அல்லது இலாபம்தேடுவது பிழையென்றாகிவிடுமா? மனிதன் தன் அயலானுக்குச் செய்யும் சேவைக்குப்பதிலாக அவன் தனக்கும், தன்னைச் சார்ந்தோர்க்கும் வாழ்க்கைக்குவேண்டிய படியையோ, சம்பளத்தையோ, இலாபத்தையோ எதிர்பார்ப்பது இயல்பு; நியாயமானது.

(தொடர்ச்சி 7-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 54-வது அற்புத ஆரோக்கியம்

அர்ச். பெர்னதெத் அம்மாளுக்கு அளித்தகாட்சிகளிலே எமது அமலோற்பவஇராக்கினி முடவர், குருடர், ஊமர், மற்றும் நோயாளரைக் குணமாக்குவோமென்று எப்போதாவது வாக்குப்பண்ணியதாக நாம்கேள்விப்படவில்லை. ஆனால், காட்சிகள் அருளப்பட்டகாலமுதல் இற்றைவரை பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் சரீரசுகம் அடைந்திருக்கிறார்களென்பது உலகம்அறிந்ததே. ஓர் வைத்திய நிபுணர் கூறுவதாவது: "லூர்துபதியில் அருளப்படும் ஆரோக்கியங்கள் பல. அவைகள் இயற்கையான மருத்துவ விதிகளுக்குக் கட்டுப்பட்ட காலவரையறைகொண்டு நிர்ணயிக்கமுடியாதனவாய் இருக்கின்றன. அற்புதமாக ஏற்படும் தசைவளர்ச்சி, இரணங்கள் ஆறுதல் போன்றவைகள் வைத்தியசாஸ்திரங்களில் குறிக்கப்பட்டுள்ள கால எல்லையிலும்பார்க்க அதிகம் துரிதமாக ஏற்படுகின்றன" என்பதே.

### வைத்தியர்குழுவின் ஆராய்ச்சி

1885-ம் ஆண்டுமுதல் லூர்துபதியில் ஓர்வைத்தியகுழு நிறுவப்பட்டிருக்கிறது. அதன்பணியாவது, லூர்துபதியில்அருளப்படும் ஆரோக்கியங்களைப் பற்றிநன்குஆராய்ந்துஅசாதாரணமும், இயற்கைக்குவிரோதமுமான ஆரோக்கியங்களின் தன்மையைப்பற்றித் தீர்மானித்துச் சாட்சிபகர்வதேயாகும். இந்தவைத்தியகுழுவில் எந்தச்சாதி சமயத்தவரும் அங்கத்துவம் வகிக்கலாம். அற்புதமாகக் குணமடைந்தவர்களென்று கருதப்படும் சகலநோயாளரதும் உரோகங்களைப்பற்றிய விபரங்களும் இந்தக்குழுவின் நுண்ணியபரிசீலனைக்கு விடப்படும். இரகசியம் என்பது இதிலேகிடையாது. நோயாளரைவைத்து நடத்தும்பரிசோதனைகள், அவர்களின் உரோகங்கள்பற்றிய வாதவிவாதங்கள்யாவும் பகிரங்கமாக வைத்தியகுழுவைச்சேர்ந்த எல்லோர் முன்னிலையிலும் நடைபெறும். "அற்புதமாகஏற்பட்ட ஆரோக்கியம்"எனத் தீர்மானிப்பது இக்குழுவின் கடமைகளுள் ஒன்றல்ல. திருச்சபை அதிகாரிகள்மாத்திரம் இத்தீர்மானத்தைச் செய்ய முடியும். ஆனால், லூர்துபதியில் இற்றைவரை அருளப்பெற்ற சுமார் ஏழாயிரம் அற்புதஆரோககியங்களுள் திருச்சபைஅதிகாரிகளால் ஐம்பத்திநாலுமட்டுமே "புதுமையானவை" யென்று அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 54-வது ஆரோக்கியம்

நுரையீரலிலும், சீரண உறுப்புகளிலும் ஏற்பட்ட புற்றுநோய்காரணமாக மாணத்தறுவாயிலிருந்த ஜோண் போஸ்தே எனப்படும் ஓர்ஆங்கிலேயர் அதிசயமாகக் குணமடைந்ததே அதிகாரபூர்வமாகத் திருச்சபைஅதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஐம்பத்துநான்காவது அற்புத ஆரோக்கியமாகும்.

இற்றைக்கு ஒருஆண்டின்முன் லண்டன் நகரிலே போசனசாலை ஒன்றின் சொந்தக்காரரான டே என்பவரின் புற்றுநோய்கொண்ட நுரையீரலில் ஒருபகுதியைச் சத்திரவைத்தியமூலம் அகற்றிவிட்டார்கள். நுரையீரலின் எஞ்சியபகுதியிலும், சீரண உறுப்பிலும் கருமையான இரணம்கண்டிருந்தது. இவர் பெயரளவில் மாத்திரம் ஓர்கத்தோலிக்கர். ஆனால், ஓர்நாள் ஆஸ்பத்திரிநோயாளரைப் பார்வையிடும் குருவானவரை அழைத்து, "நான் லூர்துபதிக்குப் போக ஆசையாயிருக்கிறேன்; அங்கு நான் குணமடைவேன் என்று நம்பவில்லை; இருந்தாலும் நான் சாகுமுன் அப்பதி செல்லவேண்டும்" எனக் கூறினார். ஆஸ்பத்திரியிலே இவரைப் பராமரித்த வைத்தியர் அதற்கு இசையவில்லை. இரண்டொரு நாள் மாத்திரம் உயிருடனிருக்கப் போகும் இவர் லூர்துபதி மண்ணில் உயிருடன் கால்வைக்கமாட்டாரெனத் திட்டமாய்க் கூறிவிட்டார். போதாக்குறைக்கு லூர்துபதிக்குப்போக டேயிடம் பணமில்லை; ஆனால், அப்பதிக்குப் போகவேண்டுமென அவர் கொண்ட ஆசையைக்கவனித்த ஆஸ்பத்திரித் தரிசகர் ஒருவர் அவர்போவதற்கு ஏற்படும்செலவைத் தாமே ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டார். டேயின் பிடிவாதத்தைக் கண்ணுற்ற வைத்தியரும் அவரைப்போகவிடச் சம்மதித்து அவருடன் கூடச்செல்ல ஒருவைத்தியரையும் ஒழுங்குசெய்தார். இவ்விரண்டு மணிநேரத்திற்கு ஒருமுறை ஊசிமூலம் மருந்துசெலுத்தி லூர்துபதிபோய்ச்சேரும்வரை டேயின்உயிரை வைத்தியர் காப்பாற்றினர்.

ஆனிமாசம் 25-ந்திகதி திவ்வியசற்பிரசாத சுற்றுப்பிரகாரத்தை டே படுக்கையிலிருந்தபடியே பார்த்துக்கொண்டிருக்கும்போது லூர்துபதி மேற்றிராணியாரான பியற்றோ மரியதெயாஸ் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டார். மறுநாட்காலை இரு ஆண்தாதிகளால் டே அற்புதநீரூற்றில் அமிழ்த்தப்பட்டார்; பிந்த அவர் கூறியபோது, "உடனேதானே நோக்காடு என்னைவிட்டு நீங்கியது; எவ்விதமான களைப்பும் எனக்குஇருக்கவில்லை" என்று தெரிவிக்கலாயினர்.

### குணமடைந்தபின்

தண்ணீரிலிருந்து தூக்கியபோது அவர் தன்னை நிற்கவிடும்படி தாதிமாரைக் கேட்டுக்கொண்டதும் அவர்கள் ஆச்சரியவசத்தராகினர். டே மற்றவர்களின் உதவியின்றியே தனது ஆடைகளைத் தரித்துச் சில்லுக் கதிரையிலுட்கார்ந்து அதைத் தாமாகவே செலுத்திக்கொண்டு ஆஸ்பத்திரி சென்றார். போகும்போது ஓர் தேநீர்ச் சாலைமுன் தரித்துச் சிற்றுண்டி அருந்திக் காப்பி பானம்பண்ணினார். "அப்போது எனக்கு இருந்தபசியோ சொல்லுந்தரமன்று" எனப் பிந்தஅவர் தெரிவித்தார். வைத்தியர் அவரைப் பரிசோதனை செய்தபோது நுரையீரலிலாவது, சீரணஉறுப்புகளிலாவது எவ்வித ரோகமும் இருந்ததாகத் தெரியவில்லை. பின்பு டே ஒரு மோட்டர் வாகனத்தை வாடைக்கு அமர்த்திப் பட்டணம் முழுவதையும் சுற்றிப் பார்வையிட்டார்.

### திரும்பி வரும்போது

சிலநாட்களின்பின் இவர் மறுபடியும் இங்கிலாந்துக்குச் சென்றபோது அவர் லூர்துபதிக்குப் போகும்போது இருந்த நிலைபரத்தை நன்கு அறிந்த ரேகு அதிகாரி ஒருவர் அவரைப் பார்த்து: "உம்மைத்தானே சில நாட்களின்முன் ஒரு தூக்குங் கட்டிலில் வைத்துக் கப்பலுக்குச் சுமந்து சென்றார்கள்; திரும்பி வரும்போது உம்மைப் பிரேதமாகத்தான் காணலாமென அப்போது சொல்லியிருந்தார்கள்" என்று சொல்லித் தமக்குண்டான ஆச்சரியத்தை வெளியிட்டார். பின்பு டே தம்மைப் பராமரித்த வைத்தியரைப் பார்க்கச்சென்றார். அவரும் ஆச்சரியவசத்தராயினர். டேயுடன் கூடச்சென்ற வைத்தியரோ "பனிக்கட்டி போல் குளிர்ந்த சலத்தில் அமிழ்த்தியவுடன் டே மரணிப்பார் எனக் காத்திருந்தேன்" எனக் கூறித் தமக்குண்டான ஆச்சரியத்தை வெளியிடலானார். ஒருமாதத்திற்குள் டே திரும்பத் தமதுஅலுவலகம் சென்றார். அற்புத நீரூற்றில் மூழ்கியபின் இற்றைவரை தான் எவ்வித நோயாலும் பீடிக்கப்பட்டதில்லையென டே பகருகின்றார்.

### ஆத்மீக ஆரோக்கியங்கள்

இவைகள்தான் காத்திர மிக்கவையாகும். அமலோற்பவ இராக்கினி திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கூறியது "தபம்" செய்ய வேண்டுமென்பதே. லூர்துபதியிலே அருளப்படும் ஆத்மீக ஆரோக்கியங்களைப்பற்றி விசாரணை நடத்திப் பகிரங்கப்படுத்த அங்கு ஓர்குழுவுமில்லை. தேவமாதாவின் பக்திவணக்கத்தைஊக்கப்படுத்துவதும், திவ்விய சற்பிரசாத பக்தியைப் பரப்புவதுமே லூர்துபதியின் இரு முக்கிய நோக்கங்களாகும். தேவனை இரந்து மன்றாடுவதற்கும், அவரின் திருத்தாயாரை வாழ்த்தி வணங்குவதற்கும், அங்கு நடப்பவைகளைக் கண்டுபாவித்துத் தங்கள் சீவியத்தைத் திருத்தி அமைப்பதற்குமே மக்கள் அங்கு செல்லுகிறார்கள். லட்சக்கணக்கான மக்கள்—திரளான பிறசமயிகளுங்கூட லூர்துபதிக்குச் சென்றுதிரும்பியதும் தங்கள் வாழ்க்கையின் உண்மை நிலையைக் கண்டுபிடித்து ஓர் புதுஉற்சாகத்துடன் புதுச்சீவியம் ஆரம்பிக்கிறார்கள். உள்ளபடியே லூர்துபதியானது தேவனின் மட்டற்ற நன்மைத்தனத்தை மறந்திருக்கும் உலகுக்கு அதைவெளிப்படுத்தும் ஓர் தீபம்போல் துலங்குகின்றது.

---

## மனிதசமூகத்தை ஒற்றுமைப் படுத்தும்......

(6ம்-பக்கத் தொடர்ச்சி)

ஆயின், இலாபத்தைக்கருதினாலும் தான்செய்யவேண்டியது சேவைஎன்பதை மறக்கப்படாது. சேவையை ஒதுக்கி இலாபப்போக்கை முன்வைப்பது ஆபத்துநிறைந்தது. தொழிலாளி தனது கூலியைமாத்திரம்கருதி நேர்மையான, கிரமமானவேலை செய்யாவிடில்—வேலைகொள்வோர் தமது இலாபத்தைமாத்திரந்தேடி உற்பத்தியின் சமுதாயநோக்கத்தைத் தேடாவிடில் பொதுநன்மை— சமுதாய நலன் கெட்டழியும்.

தொழிலை இப்படிநோக்குவதே— இந்தக் கிறிஸ்துவநோக்கமே — மக்கட்சமுதாயத்தை மாற்றியமைக்க வல்லது.

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

## கைத்தொழிலும் கைத்தாதையும்

தச்சன் பட்டறையில் மரம்அரிவதினாலே தேவசித்தம் நிறைவேறுமென்றால் அது பலருக்கு வடிகட்டிய முட்டாள்தனம்போல் தோன்றும். கடவுள் தமதுஅன்பர்களையும் ஏழ்மையான நிலைமையிலிருக்கவிடுவது மனிதபோராசைக்குக் கசப்பாகவேதோன்றும். தலைமைத் தானங்களுக்கேற்ற ஆற்றல் எம்மிடம்உண்டா என்பதுபற்றிய ஆலோசனை எதுவுமின்றி உலகில் உயர்ந்த இடம்வகிக்க நாம்ஆசிக்கின்றோம்.

தேவகட்டளையை நிறைவேற்றுவதே எமக்கு அத்தியாவசியமானது. கடவுளையும், அவரது கற்பனைகளையும் மதியாது ஆட்சிப்பீடம் ஏறியவனிலும் பார்க்கத் தச்சன்பட்டறையில்இருந்து அவர்கற்பனைகளை நிறைவேற்றுகிறவன் பெரியவன்.

கைத்தொழிலாளர் கணிப்பின்றிக் கழிக்கப்பட்டகாலத்தில் சஞ்சூசையப்பர் ஓர்ஏழைத் தொழிலாளியாய்ச் சீவித்தார். அடிமைவியாபாரம் தொழில்களுள் ஒன்றாகக் கருதப்பட்ட காலம்அது. சரீரஉழைப்பால் ஊதிபந்தேடுவது குடியானவனுக்கு இழிவென்று எண்ணப்பட்டகாலம் அது.

சூசைமுனிவர் தமது நெற்றிவியர்வை நிலத்திற்சிந்தித் திருக்குடும்பத்திற்குஜீவனந்தேடினபோதும், அவர் வலிமைகுன்றிப்போக, திருக்குமாரன் அத்தொழிலைத் தொடர்ந்துநடாத்துவதற்குப் பயின்றபோதும் கைத்தொழில் உயர்வடைந்தது. சரீரப்பிரயாசை சங்கைக்குரியதாயிற்று.

"நெற்றிவியர்வை நிலத்தில்விழ உன் உணவை உண்பாய்" எனச் சிருட்டிப்பின் ஆரம்பத்தில் கூறப்பெற்றவாக்கியம் "நீதிமான்"எனவேதத்தில்பாராட்டுப்பெற்றவரிடம் உண்மைபெற்றது. கடவுளின் ஏககுமாரனுடைய கைத்தாதையாயிருப்பினும் சூசையப்பர் அவரைத் தமதுகைத்தொழிலினாலேயே பராமரிக்கவிரும்பினர்.

சூசையப்பருடன் யேசுநாதர் வேலை செய்தபொழுது அடிமைத்தனம் அழிந்தது. மனிதசுயநலம் அதை எதிர்த்தது. கடும்போர் புரிந்தது. ஆயினும் சூசைமாதவரும், யேசுஇரட்சகரும் கைத்தொழில் செய்ததிலிருந்து கைத்தொழில், உடல் உழைப்பு இழிவுஎன்பது அழிந்து உயர்வுபெற்றது.

தொழிலைப்பாதுகாக்க இவர்களின் பராமரிப்பு அவசியம். சுயநலமிகள் அடிமைத்தனத்தைப் புதுவேஷங்களுடன் வைத்திருக்க விரும்புகின்றனர். ஆயினும் யேசுபிரானதும், சூசைமுனிவரதும் போதனைமாறானது. சம்பளத்துக்கு அடிமைப்பட்டவன் அவனை அடிமையாக்குபவனிலும் மேன்மையானவன். தொழிற்சாலையில் அடிமையாய்வாழ்பவன் முதலாளியினும் மேம்பட்டவன்.

தொழிலாளி தன்கூலிக்குத் தகுதியுடையவன்எனவும், தொழிலாளிக்குரிய கூலியைக் கொடாதுவிடுவது கொலைபோன்ற பஞ்சமாபாதகங்களுள் ஒன்றுஎனவும்போதித்துப் பாட்டாளி மக்களுக்கு நீதிவழங்கப்பட வேண்டுமென எமதுகுருநாதர் வற்புறுத்தியதை உலகம் கைக்கொள்ளவேண்டுமெனச் சூசைமுனீந்திரர் மோட்சத்தில் வேண்டுகிறார்என்க.

---

● பிரான்ஸைக்காட்டிலும் இத்தாலி 60 லட்சங்குடிசனங்களைக் கூடுதலாகக் கொண்டுள்ளது. பிரான்சிலும் பார்க்க அது மிகவுஞ்சிறியதாயும், அதன் மூன்றில்இருபங்கும் உணவுப் பயிர்உற்பத்திக்குப் பயன்படாததாயும் இருப்பதினால்தான் வருடந்தோறும் பத்துலட்சம்இத்தாலியர்கள் பிறநாடுகளில்போய்க் குடியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Educational (For Girls Only)

English Assistants, S S.C. Passed or even Unsuccessful! Assure yourself of a Certificate or a Higher Certificate worth a job on better pay.

Comprehensive Course of Training given for L.C.C. Higher General Commercial Certificate or Higher Certificate for Shorthand Typists.

Recommended Salary for Commercial Teachers is Rs. 1560—3240 with Efficiency Bar at Rs. 2640.

Higher Certificate for Shorthand Typists is in great demand in Mercantile Professions and Stenographers' Service.

No basic qualification necessary for L.C.C. examinations.

Contact,

M.M. Thuraisingham.

20, Third Cross Street,
Jaffna.


# தெரிந்துகொள்ளுங்கள்

❋ தமது பெற்றோரால் இன்னுரென்று அறியப்படாது தம்முடைய சொந்தவீட்டிலேயே 17 வருடங்களைச்செலவிட்ட அர்ச்சியசிட்டவர் யார்?

அர்ச். அலெக்சிஸ்.

❋ பிரித்தானியிலே தினமும் எத்தனை கடிதங்கள் தபாலில் போடப்படுகின்றன?

2கோடியே 50 லட்சத்துக்கும், 2 கோடியே 70 லட்சத்துக்கும் இடைப்பட்டதொகையான கடிதங்கள் தபாலில் போடப்படுகின்றன.

❋ உலகில் அதிகம்வயதுமுதிர்ந்தனவாய் இன்றுமேபடாமல் பலன்கொடுத்துக்கொண்டிருக்கும் ஒலிவ மரங்கள் எங்கேநிற்கின்றன?

பெத்லகேம்நகர்வீதியிலுள்ள இராக்கேலின்கல்லறையில் நிற்கின்றன.

❋ பிரித்தானிய பாராளுமன்றத்திலே கத்தோலிக்கபெண்மணிகளும் அங்கத்தவர்களாய் இருக்கின்ருர்களா?

ஆம், இருவர் இருக்கின்ருர்கள். இவர்களில்ஒருவர், திருமதிமேரி மைக் அலிஸ்றர். சமீபத்தில்நடந்த இடைத்தேர்தலிலே இவர் கெல்வின்கிறேவ் தொகுதிக்குத் தொழிற்கட்சிஅங்கத்தவராகத் தெரியப்பெற்றுள்ளார். மற்றவர் கோர்பல்ஸ்தொகுதி அங்கத்தவரான திரு. கல்லென்என்பவர்.

❋ பத்துஆங்கிலஅரசர்கள், அரசிகளின் ஆட்சிகாலத்தில் சீவித்திருந்த ஆங்கிலபெரியார் யார்?

வில்லியம் பார்அவர்களே. 1483-ம் ஆண்டு பிறந்தஇவர் ஓர்கமக்காரராக இருந்தபோதிலும், இவருடையஉடல் லண்டன்நகரிலுள்ள வெஸ்ற்மினிஸ்றர் அபே எனப்படும்ஆலயத்தில் அடக்கஞ்செய்யப்படலாயிற்று. 1635-ம்ஆண்டு இவருடைய கீர்த்திப்பிரதாபம் லண்டன்நகர்வரை எட்டியதால் இவர் முதலாவது சாள்ஸ்மன்னரின் அரண்மனையில் அத்தனை டாம்பீகமான செலவில் திராட்சரசம் அருந்தியும், விருந்தருந்தியும் வந்தார்.

❋ பூமியின் மேற்பரப்புமுழுவதும் பள்ளந்திட்டியில்லாது சமமாக மட்டப்படுத்தப்பட்டால் அதன்உயரம் என்னவாயிருக்கும்?

2,300 அடியாயிருக்கும்.

❋ தற்போது உலகின் அதிவிருத்தாப்பிய அதிமேற்றிராணியாராய் இருந்துவருகிறவர் யார்?

ரோமாபுரியிலே திருச்சடங்காசார திருச்சங்க காரியதரிசியாயிருந்து இன்னுமே அதிகம்ஊக்கமாக உழைத்து வருகிறவரான அல்போன்சோ கறின்சி அதிமேற்றிராணியாரே. இவருக்கு வயது 95.

❋ உலகில் வருடம்ஒன்றுக்குப் பிறக்கிறவர்கள் எத்தனைபேர்? இறக்கிறவர்கள் எத்தனைபேர்?

பிறக்கிறவர்கள் 8கோடியே 50லட்சம்பேர். இறக்கிறவர்கள் 5கோடிபேர். மற்ருேர்விதமாகச்சொல்லுகில், ஒரு நிமிஷத்தில் 162பிறப்புகளும், 95 இறப்புகளும் நிகழ்கின்றன. அதனுல், உலகின்சனத்தொகை நிமிஷம்ஒன்றுக்கு 67பேராலும், மணித்தியாலம்ஒன்றுக்கு 4,000 பேராலும், நாள்ஒன்றுக்குத் 96,000 பேராலும், வருடம்ஒன்றுக்கு 3கோடியே 50லட்சம்பேராலும் அதிகரிக்கின்றது.

❋ அர்ச். 10-ம் பத்திநாத பாப்பானவரால் நியமனஞ்செய்யப்பெற்ற மேற்றிராணிமாராய்த் தற்போது எத்தனைபேர் சீவந்தராயிருக்கின்றனர்?

நால்வர் இருக்கின்றனர். (1) ஆஸ்திறேலியதேச பிறிஸ்பேன்நகரின் ஜேம்ஸ் டூஹிக் அதிமேற்றிராணியார். வயது 86. (2) ஆஸ்திறேலியதேச மெல்போன்நகரின் மனிக்ஸ்அதிமேற்றிராணியார். வயது 94. (3) பிறேசில்தேச ஆகஸ்ரோ தே அசிஸ் மேற்றிராணியார். வயது 94. (4) ஸ்பானியதேச மதிரித்நகரின் எய்ஜோமேற்றிராணியார். இற்றைக்கு 43 வருடங்களின்முன் இவர் மேற்றிராணியாராக நியமனஞ்செய்யப்பெற்ருர்.

—❋—

## மொழிப்பிரச்சனை தீர்வழி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்; இனிப்புப்பேச்சுகள் பேசிச் சனங்களை இனிமேலும் ஏமாற்ற வேண்டாமென்று நான்பிரதமரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்; அவர் உள்ளதைஉள்ளபடி கூறவேண்டும்; "சிங்களம் மட்டுமே" சாத்தியமில்லையென்று அவர் சிங்களவரிடம் கூறவேண்டும்; வடக்கிலும், கிழக்கிலும் தமிழை உபயோகிக்க அவர் அனுமதிக்கவேண்டுமென்று அவருக்கு ஆலோசனைகூற விரும்புகிறேன்" எனக்கூறியிருக்கின்ருர்.

இது முன்னைநாள்பிரதமரின் ஓர் புதிய திருப்பமாகும். தனிச்சிங்கள சட்டம் வரப்போய், அதிலிருந்து சிங்கள ஸ்ரீ முளைக்கப்போய், இதிலிருந்து தமிழ் ஸ்ரீ தலையெடுக்கப்போய் ஸ்ரீ போராட்டம், தமிழைச் சிங்களவர்அழிக்கும் போராட்டம், சிங்களத்தைத் தமிழர் அழிக்கும் போராட்டம், தமிழையே – தமிழரையே ஒழித்துக்கட்டுதற்கான ஆயத்தமெல்லாம் தலைகாட்டிக் குழப்பஞ்செய்துகொண்டிருக்கும் போது, நாடுதான் எங்ஙனம் முன்னேறப்போகிறது? சிங்களதலைவர்களிலும் ஒருபாலார் கருத்துக்காட்டியுள்ளபடி, தமிழுக்கும், சிங்களத்துக்கும் சமஅந்தஸ்து அருளப்பட்டாலன்றி [illegible] கங்களே நா[illegible] டிருக்கும் என்க.

# இந்தத்தச்சன் யாரோ?

சாந்தபேநகரிலுள்ள லொறெத்தோ கன்னிகாமடத்தின் அலங்காரசிற்ருலயம அமைக்கப்பட்டபொழுது யாதோ ஒருதவறு நேர்ந்தகாரணமாகப் பாடகர் குழாம்தங்கும் மேன்மாடிக்குச் செல்லும்படிக்கட்டை அமைப்பதற்கான வசதி செய்யப்படவில்லை. கன்னியாஸ்திரிமார் இதையிட்டுப் பெரிதும்கவலைகொண்டவர்களாய்ச் செய்வது இன்னதென்றறியாது, தேவசித்தம்இதுவாக்குமென்று மனதைத் தேற்றிக்கொண்டார்கள்.

ஆனல், ஓர்நாள் நாடோடியான ஒருதச்சன் அந்தமடத்து வாயிற்கதவிலே தட்டினன். அப்போது அது திறக்கப்படவே, அங்குவந்த சிரேஷ்டதாயாரைநோக்கி, தான்செய்யக்கூடிய வேலை யாதுமுண்டோவென்று வினவ, தாயார் மடத்துச்சிற்ருலயத்தை அந்தத்தச்சனுக்குக் காண்பித்து, அங்கே படிக்கட்டு இல்லாக்குறையை நிவிர்த்திசெய்துதர முடியுமாவென்று அவனைக் கேட்டார். அதற்குச் தச்சன் ஆம், நிவிர்த்திசெய்துதர முடியுமென்று சொல்லி வேலையைத்தொடக்கினன்.

தொடக்கும்போது, மடத்துக்கன்னியாஸ்திரிமாரும் தச்சுத்தொழிலையே செய்து தேவபாலகனையும், அவரது திருத்தாயாரையும் உலகில்காப்பாற்றிய அர்ச். சூசையப்பரிலே தங்கள் முழுநம்பிக்கையும்வைத்து, ஆலயப் படிக்கட்டுகள் அமைக்கும்விஷயமாய் அந்தத்தச்சனுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள். கடைசியாக அந்தத் தச்சன் விசித்திரமும், அலங்காரமும், நுட்பமானவேலைப்பாடும் ஒருங்கே அமைந்த படிக்கட்டை மிகநேர்த்தியாக அமைத்து முடித்தான். அதனல் சிரேஷ்டதாயார் மிகவும்சந்தோஷப்பட்டு, அவைகளை அமைத்துக் கொடுத்த தச்சனுக்குத் தமதுநன்றியைத் தெரிவிக்கவும், சம்பளம்கொடுக்கவும் சென்றபோது அங்கேஅவனைக் காணவில்லை. எங்கும்தேடியும் அவன் அகப்படவில்லை.

இந்தப்படிக்கட்டைப் பற்றியவினேதம் என்னவானல், தற்காலம் பாவனையிலுள்ள நவீன நுண்ணிய ஆயுதங்கள் கொண்டும், மக்கள்பெற்றுள்ள கலை அறிவைக்கொண்டும் இப்படியான ஓர் படிக்கட்டை இன்னுமேஎவராலும் அமைக்கமுடியாதிருப்பதேயாகும். படிக்கட்டு அமைப்பவர்கள் படிகளைத் தாங்கிநிற்கப் பலம்பொருந்திய தூண் ஒன்றைமத்தியில் அமைப்பார்கள். ஆனல், மும்முறை வளைந்துசெல்லும் இந்தப்படிக்கட்டைத் தாங்கிநிற்க எவ்விதமான தாபரமும் கிடையாது. இன்றுவரை இந்தப்படிக்கட்டு எவராலும் பழுதுபார்க்கப் படவும் இல்லை. எமதுஇரட்சகர் இவ்வுலகில் சீவித்திருந்த காலத்தைக்குறிப்பிட்டு அமைக்கப்பட்ட இந்தப்படிக்கட்டிலுள்ள 33 படிகளிலும் இதுவரை பல்லாயிரக்கணக்கான மக்கள்ஏறியிறங்கியுள்ள போதிலும் படிகள்தேயவுமில்லை.

இந்தப்படிக்கட்டை அமைத்தவர் யாராயிருக்கலாம்? அர்ச். சூசையப்பர் ஒருதச்சனகவந்து இதைஅமைத்திருக்க வேண்டும்; அன்றேல் அங்கு வேலைசெய்யப்போன தச்சனுக்கு அவ்வாறு அமைக்கக்கூடிய அறிவாற்றலை அவர் கொடுத்திருக்கவேண்டும். சஞ்சூசைமாதவரே இந்தவிசித்திரவினேத படிக்கட்டை அமைத்தாரென்ருல் — அமைப்பதற்குக் காரணராயிருந்தாரென்ருல் அதைஎவருமே மறுக்கமாட்டார்கள். இதேபோன்று எவ்வித கருமங்களிலும்—அவைகள் சிறியவையாயினும்சரி, பெரியனவாயினும்சரி,— அவரின் தவருத அடைக்கலத்தை நம்பிக்கையுடன் அண்டிச்செல்வோமாக. அவர் நிச்சயமாக உதவுவார்என்பது திண்ணம்.

—❋—

### சிங்கள ஸ்ரீபஸ்கள்

யாழ்ப்பாணத்தில் உபயோகிக்கப்பட்டுவந்த சிங்களஸ்ரீபஸ்களில்சில சென்றவெள்ளிக்கிழமை தென்னிலங்கையைநோக்கிப் புறப்பட்டுச்சென்றுவிட்டன. இன்னும்சிலவாரங்களில் அவைகள்முற்ருக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிவிடுமெனத் தெரியவருகிறது. தற்போது யாழ்ப்பாணவீதிகளில் சிங்களஸ்ரீபஸ்களின் தொகை மிகக்குறைவாகவே காணப்படுகிறது. இவைகளும் தமிழ்ஸ்ரீயையும் சேர்த்துப் போட்டுக்கொண்டுதான் நடமாடுகின்றன.

### பகிஷ்கார இயக்கம்

சிங்கள ஜாதிகசங்கத்தின் ஆதரவிலே சென்றதிங்கட்கிழமை பாணந்துறை முற்றவெளியில் பத்தேகம் விமலாஞ்ச தேரோஎன்ற புத்தகுருபேசியபோது: அரசாங்கஊழியர்களின் வேலைநிறுத்தம் தமிழரசுக்கட்சியாலேயே ஆரம்பிக்கப்பட்டது; அதனல் இந்தவேலைநிறுத்தத்துக்கு ஓர்முடிவுகாணப் பொதுமக்களை ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்; தமிழரசுக் கட்சியினர் தமதுகுறிக்கோளை அடைவதற்காக எமதுசிங்களச்சகோதரர்கள் அவர்களை ஏன்ஆதரிக்கவேண்டுமெனக் கூறலாயினர். தமிழரின்கடைகளையும் அவர்கள்உற்பத்திசெய்யும் பொருட்களையும் பகிஷ்கரிக்கும் இயக்கம்ஒன்றை உடனடியாக ஆரம்பிக்கும்படியாக அக்கூட்டத்தில் கேட்டுக்கொள்ளப்படலாயிற்று.

### ஆசிரியர்சங்கத்தின் ஆட்சேபனை

அகில–இலங்கை அரசினர்பாடசாலைகளின் தமிழாசிரியர்கள்சங்கம் பிரதமருக்கும், ஏனையமந்திரிகளுக்கும் அனுப்பியிருக்கும் ஆட்சேபனைக் கடிதம்ஒன்றிலே, கல்விமந்திரி திரு. டபிள்யு. தஹநாயகா தமிழ்மக்களிடம் மன்னிப்புக்கேட்க வேண்டுமென வற்புறுத்தியிருக்கின்றது. சென்றபுதன்கிழமை தனதுகாரியாலயம்முன்பாகக் கல்விமந்திரி பேசியவிடத்து, தமிழ்மக்களைப் பெரிதும்இழிவுபடுத்தும்முறையில் சிலவார்த்தைகளை உபயோகித்ததையிட்டு முன்சொன்ன ஆசிரியர்கள் சங்கம் தனதுஅதிருப்தியைப் பிரதமருக்குத் தெரிவித்திருக்கின்றது.

* * *

● 1956-ம் ஆண்டின் ஐப்பசி-கார்த்திகை மாதங்களிலே ஹங்கேரிய சுதந்திரப்புரட்சிக்கலகம் நடைபெற்றதுமுதல் இதுவரை கம்யூனிஸ்தஹங்கேரியிலிருந்து இரண்டுலட்சத்துக்கு மேற்பட்ட ஹங்கேரியமக்கள் மேற்கு ஐரோப்பியநாடுகளுக்குத் தப்பியோடியிருக்கின்ருர்கள்.

● 6கோடிமக்களின் தாய்ப்பாஷையாகிய பிரான்சியபாஷை உலகின் பல்வேறுபகுதிகளிலுமுள்ள மற்றும் 60 கோடிமக்களின் இரண்டாவதுபாஷையாக உபயோகத்தில் இருந்துவருகிறது. ருஷிய, ஸ்பானிய பாஷைகள் இரண்டும் உலகிலுள்ள 20கோடிமக்களின்பாஷைகளாய் இருந்துவருகின்றன.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 1-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org